# சோதிடமலர்

# SOTHIDA MALAR




உள்ளே...... ....

- 1987-ல் உங்கள் பலன் எப்படி?
- என் சோதிடமும், அதன் உண்மைகளும்.
- குரு சுக்கிர யோகம்
- மூலிகைகளும் மருத்துவமும்.
- ஆய்வு மன்றம்,
- சோதிடம் கற்போம்.

இன்னும் பல

க்ஷய ௵ மார்கழி ௴

(16-12-86—13-1-87)

விலை ரூபா 3-00

மாதவெளியீடு

உ

# சோதிட மலர்

SOTHIDA MALAR

❋

ஆசிரியர்:

பிரம்மஸ்ரீ கி. சதாசிவ சர்மா

(சம்ஸ்கிருத பண்டிதர்)

❋

க்ஷய ௵ மார்கழி ௴

( 16 - 12 - 86 )

மலர் 9 || இதழ் 9

ஹராய பீமாய ஹரிப்ரியாய
பவாய சாந்தாய பராத்பராய
ம்ருடாய ருத்ராய த்ரிலோசனாய
நமோஸ்து துப்யம் பரமேஸ்வராய ||

★ ★ ★

கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலம்நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பரவி யோமமாகித் திருச்சிற்றம்புலத்தில் நின்று
பொற்புடனடம் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி

★ ★ ★

அருளாவது தொடர்புடையவை என்றும் தொடர்பிலாதவை என்றும் நோக்காது இயல்பாகவே எல்லா உயிரினங்கள் மேலும் செலுத்தப்படும் கருணையாகும். கருணையும் இரக்கமும் ஒன்றேயாகும். உலகவின்பத்திற்கு பொருள் காரணமாதல் போல பேரின்பமாகிய தருமத்திற்கு அருள் காரணமாகின்றது. அருள் பரிபூரணமாகத் தங்கியிருப்பவனிடம் பழி பாவம் முதலிய துன்பங்கள் எப்போதும் அணுகுவதில்லை. வாய்மை (சத்தியம்) எனும் எண்ணெய்த் தகழியில் பொறுமையாகும் திரியையிட்டு தவமெனும் நெய்யைவிட்டு அருளாகும் விளக்கையேற்றுவதினால் அஞ்ஞானமெனும் பேரிருள் அறவே நீங்கி விடுகிறது. அப்போது அகரவுயிர் போல் அறிவாகி எங்கும் நிகரில்லாது நிறைந்து நிற்கும் இறைவன் மெய்ப்பொருளாக காட்சி தருகிறான். இதனால் அருளாளன் எனும் திவ்ய நாமத்தை இறைவன் பெறுகிறான்.

★ ★ ★

## மார்கழி நோன்பு

வைகறை யாமத் துயிலெழுந்து தான் செய்யும் நல்லறமும் ஒண்பொருளும் சிறந்து செயல்படுவதற்கு உகந்த காலம் மார்கழி மாதம். 'மாதங்களில் நான் மார்கழி' என்று கண்ணபரமாத்மாவே இம்மாதத்தை வியந்து கூறியிருப்பது மாதத்தின் சிறப்பை உணர்த்துகிறது. கார்த்திகைத் தீபதர்சனம் செய்த கன்னிப் பெண்கள் தம் தோழியரை விடியற்கால வேளையில் நீராட வரும்படி அழைப்பது திருவெம்பாவைப் பாடல்களின் தன்மையையும்; ஆனந்த நித்திரை செய்து கொள்ளும் இறைவனை ஆனந்தமாகப் பாடி துயிலெழுப்புதல் திருப்பள்ளியெழுச்சி பாடல்களின் உண்மையையும் குறிப்பதான இப்பாடல்கள் மார்கழி மாதத்திற்கு திருமுகமாக அமைகின்றன. தக்ஷிணாயனமாகும் இராக்காலத்தின் முடிவாகிய உஷக்காலம் தேவர்களின் காலைப் பொழுதாகும். மார்கழி மாதம் முழுநாட்களுமே ஆலயங்களெங்கும் காலைப்பூசை விசேஷமாக நடைபெற்று வருகின்றன. மேலும் மார்கழி மாத வைகறைப் பொழுதில் மக்கள் யாபேரும் இறையருள் பெற்று தத்தமது கருமங்களெல்லாம் இடையூறின்றி இனிது நிறைவேறும் வண்ணம் பிரார்த்தனை செய்யும் காலங்களில் ஸ்ரீ நடராஜப் பெருமான் பஞ்ச கிருத்தியங்களையும் (ஐந்தொழில்களையும்) செய்து ஆன்மாக்களை ரசனிக்கிறான். மார்கழித் திருவாதிரை நாளில் இரவு முழுதும் அபிஷேக ஆராதனைகளில் திளைத்திருந்து எம் பெருமான் சிவகாமி சமேதராக பக்தர்களுக்குக் காட்சி கொடுப்பதும் மார்கழி நோன்பின் சின்னங்களாகும்.

# நாள் எப்படி?

மார் 1 செவ் (16-12-86) பூரணை பகல் 12-35 வ. மிருகசீரிடம் - சித்தம் இரவு 1-21 வரை. இரவு நடேசர் ஆர்த்ராபிஷேகம். சுபகருமங்களை விலக்குக. ராகு 3-22—4-52

மார் 2 புத (17-12-86) பிரதமை பி.ப 8-07 வரை. திருவாதிரை பி.இரவு 4-18 வரை. சித்தம் உதயம் நடேசர்தரிசனம் சுபகருமங்களுக்கு ஏற்ற தினமன்று. ராகு 12-22—1-52

மார் 3 வியா (18-12-86) துவிதியை மாலை 5-38 வ. புனர்பூசம் - அமிர்தம் முழுவதும். எல்லாக்கருமங்களும் செய்யலாம். ராகு 1-53—3-23

மார் 4 வெள் (19-12-86) திரிதியை இரவு 8-04 வ. புனர்பூசம் - சித்தம் காலை 7-12 வரை. அவசிய கருமங்களை காலை 7-12க்கு முன் செய்க. ராகு 10-54—12-24

மார் 5 சனி (20-12-86) சதுர்த்தி இரவு 10-19 வ. பூசம் - சித்தம் பகல் 10-00 வரை, சங்கடசதுர்த்தி ராகு 9-24—10-54

மார் 6 ஞாயி (21-12-86) பஞ்சமி இரவு 12-14 வ. ஆயிலியம் - சித்தம் பகல் 12-32 வரை, அசுபதினம். ராகு 4-54—6-24

மார் 7 திங் (22-12-86) ஷஷ்டி இரவு 1-43 வரை, மகம் – மரணம் பகல் 2-43 வரை, 2-43ன் மேல் நற்கருமங்கள் செய்க. ராகு 7-55—9-25

மார் 8 செவ் (23-12-86) ஸப்தமி பி.இ. 2-37 வரை, பூரம் மாலை 4-23 வரை, சித்தாமிர்தம் முழுவதும். அசுபதினம். ராகு 3-26—4-56

மார் 9 புத (24-12-86) அஷ்டமி பி.இ. 2-47 வரை. உத்தரம் மாலை 5-25 வரை, அமிர்தசித்தம், கரிநாள். ராகு 12-26—1-56

மார் 10 வியா (25-12-86) நவமி பி.இ. 2-10 வ. அத்தம் மாலை 5-42 வரை, சித்தம் சுபகருமங்களை விலக்குக. ராகு 1-57—3-27

மார் 11 வெள் (26-12-86) தசமி இரவு 12-45 வ. சித்திரை - மரணம் மாலை 5-12 வரை, கரிநாள் அவசியகருமங்களை மாலை 5-12ன் மேல் செய்க. ராகு 10-57—12-27

மார் 12 சனி (27-12-86) ஏகாதசி இரவு 10-34 வ. சுவாதி பி.ப. 3-56 வரை, அமிர்தசித்தம் ஸர்வ ஏகாதசி விரதம் சுபகருமங்கட்கு நன்று. ராகு 9-27—10-57

மார் 13 ஞாயி (28-12-86) துவாதசி இரவு 7-48 வ. விசாகம் பி.ப. 1-58 வரை, மரணம். அசுபதினம் ராகு 4-58—6-28

மார் 14 திங் (29-12-86) திரயோதசி மாலை 4-20 வ. அனுஷம் பகல் 11-26 வரை, சித்தம் பிரதோஷ விரதம், கர்ப்போட்ட ஆரம்பம் நற்கருமங்களை பகல் 11-26திற்கு முன் செய்க. ராகு 7-58—9-28

மார் 15 செவ் (30-12-86) சதுர்த்தசி பகல் 12-35வ. கேட்டை - மரணம் காலை 8-30 வரை, மூலம் பி.இ. 5-21 வரை, அமாவாசை விரதம் சுபதினமன்று. ராகு 3-29—4-59

மார் 16 புத (31-12-86) அமாவாசை காலை 8-40வ. பிரதமை பி.இ. 4-47 வரை, பூராடம் பி.இ. 8-11 வரை, அமிர்தம் சுபகருமங்களை விலக்குக. ராகு 12-29—1-59

மார் 17 வியா (1-1-87) துவிதியை பி.இ. 1-06 வ. உத்தராடம் இரவு 11-14 வரை, சித்தம் சந்திர தர்சனம் சுபகருமங்கட்கு நன்று. ராகு 2-00—3-30

மார் 18 வெள் (2-1-87) திரிதியை - மரணம் இரவு 9-51 வரை, திருவோணம் இரவு 8-40 வரை, அசுபதினம் ராகு 11-01—12-31

மார் 19 சனி (3-1-87) சதுர்த்தி இரவு 7-11 வரை, அவிட்டம் மாலை 6 41 வரை, சித்தாமிர்தம். சதுர்த்திவிரதம் ராகு 9-31—11-01

மார் 20 ஞாயி (4-1-87) பஞ்சமி மாலை 5-15 வரை, சதயம் மாலை 5-24 வரை, சித்தம் ஷஷ்டிவிரதம் மாலை 5-24 வரை நற்கருமங்கள் செய்யலாம். ராகு 5-01—6-31

மார் 21 திங் (5-1-87) ஷஷ்டி மாலை 4-08 வரை, பூரட்டாதி மாலை 4-57 வரை, மரணம் அசுபதினம். ராகு 8-01—9-31

மார் 22 செவ் (6-1-87) ஸப்தமி பி.ப. 3-54 வரை, உத்தரட்டாதி மாலை 5-20 வரை, அமிர்தம் சுபகருமங்கட்கு ஏற்றதல்ல. ராகு 3-32—5-02

மார் 23 புத (7-1-87) அஷ்டமி மாலை 4-29 வரை, ரேவதி மாலை 6-32 வரை, மரணம். சுபதினமன்று. ராகு 12-32—2-02

மார் 24 வியா (8-1-87) நவமி மாலை 5-48 வரை, அசுவினி இரவு 8-24 வரை, அமிர்தசித்தம் ராகு 2-03—3-33

மார் 25 வெள் (9-1-87) தசமி இரவு 7-41 வரை, பரணி இரவு 10-48வரை, சித்தம், சுபகருமங்களை விலக்குக. ராகு 11-03—12-33

மார் 26 சனி (10-1-87) ஏகாதசி இரவு 9-59 வரை, கார்த்திகை பி.இ 1-34 வரை, அமிர்தசித்தம், ஸர்வவைகுண்ட ஏகாதசி விரதம், கார்த்திகை விரதம், சுபதினமன்று. ராகு 9-33—11-03

மார் 27 ஞாயி (11-1-87) துவாதசி இரவு 12-29வ. ரோகிணி-சித்தம் பி.இ. 4-31 வரை, கர்ப்போட்ட முடிப்பு, சுபகருமங்கள் செய்யலாம் ராகு 5-04—6-34

மார் 28 திங் (12-1-87) திரயோதசி பி.இ. 3-04வ. மிருகசீரிடம்-அமிர்தசித்தம் முழுவதும், பிரதோஷ விரதம் எல்லாக்கருமங்களும் செய்யலாம். ராகு 8-04—9-34

மார் 29 செவ் (13-1-87) சதுர்த்தசி பி.இ. 5-36வ. மிருகசீரிடம்-சித்தம் காலை 7-30 வரை, போகிப் பண்டிகை, சுபதினமன்று. ராகு 3-34—5-04

# மகர லக்கின ஆணும் கடக லக்கின பெண்ணும் சேர்வது நன்மையானதா?

வே. சின்னத்துரை — நல்லூர்

கடக லக்கினப் பெண் இந்த மனிதனுடன் சம்பந்தப்பட்டால் அவனுடைய தொழிலை தன்னியல்பாக ஏற்க தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்ளவேண்டும். இயற்கையாக அவ ஏற்பா என்றதை அவன் பாவனை செய்து கொள்வான். அவனுடைய கவனத்தை அவள் ஈர்த்துக் கொண்டிருப்பாள். அவன் தன்னுடைய தொழிலில் ஈடுபடுத்தப்படவேண்டும் என்று மகரகாரன் விரும்புவான். ஏனெனில் அப்போ அவள் தன்னில் தங்காமலிருப்பாளென்று. பொருளாதாரச் சிக்கல்கள் ஏற்பட இடமில்லை. ஏனெனில் இருவரும் பணத்துடன் சம்பந்தப்பட்டவர்களானதால் உழைப்பதும் சேமிப்பதும் அவனுக்கு இயற்கையாக ஏற்பட்டதே. எந்த வகையிலும் சேதத்தை அவன் விரும்புவதில்லை. தேவைக்கதிக செலவுகள் மட்டுப்படுத்தப்பட வேண்டும் என்பது அவனுடைய கொள்கை. நம்பிக்கை, பக்தி சிரத்தையுள்ள மனிதன் இவன். ஆகையால் அவள் அவனுடன் திருப்தியாயிருக்க வேண்டும்.

அவனுடைய தொழில் அவர்களுடைய பாலியலில் தலையீடு செய்யக்கூடும். ஏனெனில் அவன் படுக்கையில படுத்திருக்கும்போது தான் படிப்பான். அத்துடன் தன் தொழில் பத்திரங்களையும் வாசிப்பான். அவள் கெட்டிக்காரியாயிருந்தால் அவனுடைய வேலைப் பத்திரங்களுக்குள் ஒரு காமப் புத்தகத்தையும் சொருகி விடவேண்டும். இது அவனை அவள் வசப்படுத்தும்.

மிகவும் கடும்முயற்சியுடைய ஒரு உறவு.

# மணப்பந்தல்

| | | | |
|---|---|---|---|
| | சந் ராகு | | |
| | கிரகநிலை | | சுக் |
| | | | சனி |
| ல | குரு | செ கே | சூரி புத |

ஜாதகம் 68 பெண்
பிறந்த திகதி: 21-9-1948
நேரம்: பகல் 2-00 மணி
நட்சத்திரம்: அசுவினி

ஹிந்துவேளாண் குலத்தைச் சேர்ந்த யாழ் பிறப்பிடமாகக் கொண்ட, பல்கலைக்கழகப் பட்டம் பெற்றவளுமான, தற்சமயம் கீர்த்தி பெற்ற ஒரு ஸ்தாபனத்தில் உயர் பதவி வகிப்பவள், இதே இனத்தைச் சேர்ந்த பொறுப்பு வாய்ந்த நிர்வாகி, பேங் ஆபீசர் அல்லது அதற்குச் சமதையான உத்தியோகம் வகிப்பவராயும், சமயப் பற்றுள்ள மணமகன் விரும்பப் படுகின்றார்.

மாதவருமானம் ரூ. 4000/-

முகவரி: மணப்பந்தல், 'சோதிடமலர்'
மட்டுவில் - சாவகச்சேரி.

3-2-1987ல் ஏற்படும்

## வியாழ மாற்றம் நன்மையானதா?

அடுத்த இதழை வாசிக்கத் தவறாதீர்கள்!


## உதயலக்கினம் காணும் பதகம் (யாழ்ப்பாணம்)

க்ஷய ௵ மார்கழி ௴ 1-ந் தேதி முதல் 29-ந் தேதி வரை. (16-12-86 முதல் 13-1-87 வரை)

| இங் டிசம் | தமி மார் | வாரம் | தனுசு ம.மி. முதல் (காலை) | தனுசு ம.மி. வரை | மகரம் ம. மி. வரை (காலை) | கும்பம் ம. மி. வரை (பகல்) | மீனம் ம. மி. வரை (பகல்) | மேடம் ம. மி. வரை (பி.ப) | இடபம் ம. மி. வரை (மாலை) | மிதுன ம. மி. வரை (இரவு) | கடகம் ம. மி. வரை (இரவு) | சிங்கம் ம. மி. வரை (இரவு) | கன்னி ம. மி. வரை (பி.இ) | துலா ம. மி. வரை (பி.இ) | விருச்சி ம. மி. வரை (பி.இ) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 16 | 1 | செவ் | 6 22 | 8 31 | 10 27 | 12 12 | 1 55 | 3 44 | 5 47 | 7 58 | 10 5 | 12 6 | 2 5 | 4 9 | 6 19 |
| 17 | 2 | புதன் | 6 20 | 8 26 | 10 22 | 12 7 | 1 50 | 3 39 | 5 42 | 7 53 | 10 0 | 12 1 | 2 0 | 4 4 | 6 14 |
| 18 | 3 | வியா | 6 15 | 8 23 | 10 19 | 12 4 | 1 47 | 3 36 | 5 39 | 7 50 | 9 57 | 11 58 | 1 57 | 4 1 | 6 11 |
| 19 | 4 | வெள் | 6 12 | 8 20 | 10 16 | 12 1 | 1 44 | 3 33 | 5 36 | 7 47 | 9 54 | 11 55 | 1 54 | 3 58 | 6 8 |
| 20 | 5 | சனி | 6 9 | 8 16 | 10 12 | 11 57 | 1 40 | 3 29 | 5 32 | 7 43 | 9 50 | 11 51 | 1 50 | 3 54 | 6 4 |
| 21 | 6 | ஞாயி | 6 5 | 8 12 | 10 8 | 11 53 | 1 36 | 3 25 | 5 28 | 7 39 | 9 46 | 11 47 | 1 46 | 3 50 | 6 0 |
| 22 | 7 | திங் | 6 1 | 8 8 | 10 4 | 11 49 | 1 32 | 3 21 | 5 24 | 7 35 | 9 42 | 11 43 | 1 42 | 3 46 | 5 56 |
| 23 | 8 | செவ் | 5 57 | 8 3 | 9 59 | 11 44 | 1 27 | 3 16 | 5 19 | 7 30 | 9 37 | 11 38 | 1 37 | 3 41 | 5 51 |
| 24 | 9 | புதன் | 5 52 | 8 0 | 9 56 | 11 41 | 1 24 | 3 13 | 5 16 | 7 27 | 9 34 | 11 35 | 1 34 | 3 38 | 5 48 |
| 25 | 10 | வியா | 5 49 | 7 56 | 9 52 | 11 37 | 1 20 | 3 9 | 5 12 | 7 23 | 9 30 | 11 31 | 1 30 | 3 34 | 5 44 |
| 26 | 11 | வெள் | 5 45 | 7 52 | 9 48 | 11 33 | 1 16 | 3 5 | 5 8 | 7 19 | 9 26 | 11 27 | 1 26 | 3 30 | 5 40 |
| 27 | 12 | சனி | 5 41 | 7 49 | 9 45 | 11 30 | 1 13 | 3 2 | 5 5 | 7 16 | 9 23 | 11 24 | 1 23 | 3 27 | 5 37 |
| 28 | 13 | ஞாயி | 5 38 | 7 45 | 9 41 | 11 26 | 1 9 | 2 58 | 5 1 | 7 12 | 9 19 | 11 20 | 1 19 | 3 23 | 5 33 |
| 29 | 14 | திங் | 5 34 | 7 40 | 9 36 | 11 21 | 1 4 | 2 53 | 4 56 | 7 7 | 9 14 | 11 15 | 1 14 | 3 18 | 5 28 |
| 30 | 15 | செவ் | 5 29 | 7 37 | 9 33 | 11 18 | 1 1 | 2 50 | 4 53 | 7 4 | 9 11 | 11 12 | 1 11 | 3 15 | 5 25 |
| 31 | 16 | புதன் | 5 26 | 7 32 | 9 28 | 11 13 | 12 56 | 2 45 | 4 48 | 6 59 | 9 6 | 11 7 | 1 6 | 3 10 | 5 20 |
| 1 | 17 | வியா | 5 21 | 7 28 | 9 24 | 11 9 | 12 52 | 2 41 | 4 44 | 6 55 | 9 2 | 11 3 | 1 2 | 3 6 | 5 16 |
| 2 | 18 | வெள் | 5 17 | 7 25 | 9 21 | 11 6 | 12 49 | 2 38 | 4 41 | 6 52 | 8 59 | 11 0 | 12 59 | 3 3 | 5 13 |
| 3 | 19 | சனி | 5 14 | 7 22 | 9 18 | 11 3 | 12 46 | 2 35 | 4 38 | 6 49 | 8 56 | 10 57 | 12 56 | 3 0 | 5 10 |
| 4 | 20 | ஞாயி | 5 11 | 7 17 | 9 13 | 10 58 | 12 41 | 2 30 | 4 33 | 6 44 | 8 51 | 10 52 | 12 51 | 2 55 | 5 5 |
| 5 | 21 | திங் | 5 6 | 7 14 | 9 10 | 10 55 | 12 38 | 2 27 | 4 30 | 6 41 | 8 48 | 10 49 | 12 48 | 2 52 | 5 2 |
| ஜன 6 | 22 | செவ் | 5 3 | 7 9 | 9 5 | 10 50 | 12 33 | 2 22 | 4 25 | 6 36 | 8 43 | 10 44 | 12 43 | 2 47 | 4 57 |
| 7 | 23 | புதன் | 4 58 | 7 5 | 9 1 | 10 46 | 12 29 | 2 18 | 4 21 | 6 32 | 8 39 | 10 40 | 12 39 | 2 43 | 4 53 |
| 8 | 24 | வியா | 4 54 | 7 1 | 8 57 | 10 42 | 12 25 | 2 14 | 4 17 | 6 28 | 8 35 | 10 36 | 12 35 | 2 39 | 4 49 |
| 9 | 25 | வெள் | 4 50 | 6 57 | 8 53 | 10 38 | 12 21 | 2 10 | 4 13 | 6 24 | 8 31 | 10 32 | 12 31 | 2 35 | 4 45 |
| 10 | 26 | சனி | 4 46 | 6 53 | 8 49 | 10 34 | 12 17 | 2 6 | 4 9 | 6 20 | 8 27 | 10 28 | 12 27 | 2 31 | 4 41 |
| 11 | 27 | ஞாயி | 4 42 | 6 49 | 8 45 | 10 30 | 12 13 | 2 2 | 4 5 | 6 16 | 8 23 | 10 24 | 12 23 | 2 27 | 4 37 |
| 12 | 28 | திங் | 4 38 | 6 45 | 8 41 | 10 26 | 12 9 | 1 58 | 4 1 | 6 12 | 8 19 | 10 20 | 12 19 | 2 23 | 4 33 |
| 13 | 29 | செவ் | 4 34 | 6 41 | 8 37 | 10 22 | 12 5 | **1 54** | **3 57** | 6 8 | 8 15 | 10 16 | 12 15 | 2 19 | 4 29 |

*இப்பதகத்தின் உதவியுடன் ஒரு குழந்தை ஜனனமான நேரத்துக்குரிய இலக்கினத்தை இலகுவில் அறிந்து கொள்ளலாம்.
உ-ம்: மார்கழி 29 உ (13-1-87) பகல் 2-0 மணிக்கு என்ன லக்னம்? தடித்த எழுத்திலுள்ளதை கவனிக்க. (1-54—3-57) இடபலக்னம்

# மார்கழி மாதக் கிரகநிலை




## கிரக மாற்றங்கள்

10உ (26-12-86) பி.இ. 2-25 தனு-புதன்
15உ (30-12-86) மாலை 4-17 மீன-செவ்
16உ (31-12-86) மாலை 6-13 விரு-சுக்
29உ (13-1-87) இரவு 11-24 மக-புத
6உ சனி உதயம்

## சந்திரனது இராசிநிலை

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மார் | 1உ | (16-12-86) | பகல் | 11-52 | முதல் | மிதுனம் |
| | 3உ | (18-12-86) | இரவு | 12-29 | ,, | கடகம் |
| | 6உ | (21-12-86) | பகல் | 12-32 | ,, | சிங்கம் |
| | 8உ | (23-12-86) | இரவு | 10-42 | ,, | கன்னி |
| | 10உ | (25-12-86) | பி.இ. | 5-33 | ,, | துலாம் |
| | 13உ | (28-12-86) | காலை | 8-31 | ,, | விருச்சிகம் |
| | 15உ | (30-12-86) | காலை | 8-30 | ,, | தனுசு |
| | 17உ | (1-1-87) | காலை | 7-25 | ,, | மகரம் |
| | 19உ | (3-1-87) | காலை | 7-36 | ,, | கும்பம் |
| | 21உ | (5-1-87) | பகல் | 11-02 | ,, | மீனம் |
| | 23உ | (7-1-87) | மாலை | 6-32 | ,, | மேடம் |
| | 25உ | (9-1-87) | பி.இ. | 5-26 | ,, | இடபம் |
| | 28உ | (12-1-87) | மாலை | 5-58 | ,, | மிதுனம் |

### கிரகநிலை குறிக்க:-

* 4-ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள பதகத்தின்படி மார்கழி மீ 29 உ பகல் 2-00 மணிக்கு இடப லக்னம் என அறிந்து கொண்ட பின் 'இடபம்' என்ற கட்டில் 'ல' என்று குறித்துக் கொள்ளவும். கிரகநிலையை அனுசரித்து மாற்றமடைந்த கிரகங்களையும் கவனித்து கிரகநிலை குறிக்கவும். லக்னம் முதல் வலமாக 1முதல் 12 வரை இலக்கமிடுக,

**சாதபலன்**

மாதம் பிறக்கும்போது விருச்சிகலக்கினம் உதயமாகிறது. செவ்வாய் - சனி தீயபார்வை இருப்பதால் மனவேறுபாடும், கலகங்களும் இடையிடையே தோன்றும். மார்கழி 15-ந் திகதி செவ்வாய் மீனத்துக்குச் செல்வதால் அதன்மேல் சற்று அமைதி காணும். எனினும் சனி - சந்திரன் எதிர்திருஷ்டி இருப்பது எவ்வகையிலும் அரசியல்தீர்வு காண்பதில் முட்டுக்கட்டை இருக்கும்.

# நலந்தரும் கால ஹோரைகள்

**சூரிய ஹோரை:-** உத்தியோகம், வியாபாரம் செய்ய, அரசாங்கத்திடம் சலுகைபெற, பெரிய உத்தியோகத்தரைக் காண, அரசாங்க அலுவல்கள் தொடங்க, பிதா வர்க்கத்தாருடன் பேச்சுக்கள் நடத்த நலம்.

**சந்திர ஹோரை:-** ஸ்திரீகளைப்பற்றிப் பேசுவது, கேள்விகள் கேட்பது, கவர்ச்சியான பேச்சுக்களை ஆரம்பிக்க, மாதாவர்க்கத்தாருடன் பேச உசிதம்; தோம்பு சம்பந்தப்பட்ட நீண்டகால விஷயங்கள் இதில் செய்யக்கூடாது.

**செவ்வாய் ஹோரை:-** உள்ளக்கருத்துக்களை மறைமுகமாகவைப்பது நலம். பூமிச்செய்கைகள் (மண்ணைக் கிண்டுதல், கொத்துதல் போன்றன) செய்ய, போருக்குப்புறப்பட, ஓமம், அக்கினி சம்பந்தமான வேலை ஆரம்பிக்க, உடற்பயிற்சி முதலியனவற்றிற்கு நன்று.

**புதன் ஹோரை:-** வதந்திகள் அனுப்பவும், எழுத்து வேலைகளுக்கும், பரீக்ஷை எழுதவும், ஆராய்ச்சிகள் செய்யவும், வானொலித் தொடர்புகள் கொள்ளவும், புத்தகம் எழுதவும், வெளியிடவும் நன்று

**குரு ஹோரை:-** எல்லாவற்றிற்கும் நலம். பணக்காரர் தயவை நாடுவது, எல்லாச் சாமான்களையும் வாங்குவது, உத்தியோகங்கள், பணவிஷய விவரங்களைத் தொடங்க, ஆடை ஆபரணங்கள் சேர்க்க, காரியங்கள் தடையின்றி நடக்கக் கடன்களைப் பெறுவது, ஷராப் வியாபாரிகளுக்கும் விவசாய லாபங்களுக்கும் இந்த ஹோரை மிகவும் சிறந்தது. விருந்துக்கு நல்லதல்ல.

**சுக்கிர ஹோரை:-** சுபவேலைகள் நடத்த, பெண்களைப்பற்றிப்பேச, இன்பக்கேளிக்கைகள், விவகப்பேச்சு, பெண்களுடன் உரையாடல், பொன்னுபரணங்கள், வாகனங்கள் கொள்வனவு செய்தல் இன்பக்கலைகள் தொடங்குதல், சோடனை வேலைகள் ஆரம்பித்தல் முதலியனவற்றிற்கு சிறந்தது.

**சனி ஹோரை:-** இவ்வோரை மிகக் கொடியது. இருந்தபோதிலும் நிலங்கள், அவை சம்பந்தப்பட்ட சொத்துக்களைப்பற்றி நடவடிக்கை எடுக்க, தோம்பு துறவுகளைப்பற்றிப் பேசவும் நல்லது.

## (மார்கழி மாதம் 1-ந் தேதி முதல் 29-ந் தேதி வரை)

(சூரிய உதயம் 6 மணி 22 நிமிஷம்)

| வாரம் | 6...22<br>7...22 | 7...22<br>8...22 | 8...22<br>9...22 | 9...22<br>10...22 | 10...22<br>11...22 | 11:..22<br>12...22 | 12...22<br>1...22 | 1...22<br>2...22 | 2...22<br>3...22 | 3...22<br>4...22 | 4...22<br>5...22 | 5...22<br>6 . 22 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **பகல்** | | | | | | | | | | | | |
| ஞாயி | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| திங்க | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| செவ் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| புதன் | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |
| வியா | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| வெள் | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| சனி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| **இரவு** | | | | | | | | | | | | |
| ஞாயி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| திங்க | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| செவ் | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| புதன் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| வியா | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| வெள் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| சனி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |

**குறிப்பு:-** நீங்கள் செய்யவேண்டிய கருமம் என்ன, எந்த ஹோரையில் செய்வது நலம் என்பதை மேலே உள்ள குறிப்புகளில் ஆராய்ந்து குறிப்பிட்ட ஹோரை வரும் நேரத்தைப் பதகத்தில் பார்த்து அந்தநேரத்தில் குறிப்பிட்ட கருமத்தைச் செய்யவும். நிச்சயம் அனுகூலமாகும்.

# குரு சுக்கிர யோகம்

நவகோள்களில் குருவும் சுக்கிரனும் பூரண சுபக்கிரகங்களாகும். பணம், பேச்சுவன்மை, புத்தி, மந்திரம், ஞானம், அரசபதவி, ஐஸ்வரியம், குழந்தைச் செல்வம் என்பனவற்றை வழங்குபவர் குரு; மனைவி, வாகனம், ஸ்திரீசுகம், சினிமா, சங்கீதம், விநோத பேச்சு ஆகியவற்றை அளிப்பவர் சுக்கிரன் ஆவர். மனிதனின் வாழ்க்கையில் மிக முக்கியமானதாக இருக்கும் மனைவி மக்கள் சுகம் பெற குரு, சுக்கிரன் பலம் மிக அவசியமாகும். இதன் காரணமாகவே குருவை புத்திர காரகன் என்றும், சுக்கிரனைக் களத்திர காரகன் என்றும் நூல்களில் கூறப்படுகிறது. தேவர்களுக்குத் தலைவனாக குரு இருப்பதால் அவரை தேவ குரு என்பர். சுக்கிரன் அசுரர்களுக்குத் தலைவனாக விளங்குவதால் அசுர குரு என அழைக்கப்படுகிறார். தேவகுரு, அசுரகுருஆகிய இவ்விருவரும் ஒருவரின் ஜாதகத்தில் இணைந்திருந்தால் ஜாதகருக்கு குரு சுக்கிரயோகமாகும்.

குரு சுக்கிரன் கூடுவதை மருதயோகம் என்பர். இதனால் ஜாதகர் பட்டம் பதவிகள் பெற்று நல்ல மனையாளும் வாய்க்கப்பெற்று நற்புத்திரப் பேறும் கிடைக்கப்பெற்று வளமான வாழ்க்கை வாழ்வர். குரு சுக்கிரனை சுபன் பார்த்தால் திடீர் அதிஷ்டம் கிடைக்கும். குரு, சுக்கிரன் நன்கு அமைந்த ஜாதகர்கள் மனைவியாலும், பிள்ளைகளாலும் நல்லயோகத்தைப் பெறுவர். பிற்காலத்தில் பிள்ளைகள் அரசர் போல் அதிகாரம் படைத்து வாழ்வர்.

குரு சுக்கிரன் சேர்ந்த வீட்டோன் கேந்திரத்திலிருப்பின் ராஜயோகமாகும்; மன்னரால் பட்டம் பதவியும், மனைவியால் சொத்தும் சுகமும் ஏற்படும். லக்கினத்தில் குரு திக்பலம்பெற்று 5, 7, 9-ம் இடங்களைப் பார்ப்பது குருவுக்கு தனிப் பெருமையாகும். லக்கினத்தில் குரு சுக்கிரன் இருவரும் இருப்பது மிகவிசேடம். 2ல் குரு சுக்கிரன் இருப்பின் வாக்குவன்மை ஏற்படும். ஜோதிடத்திலும் ஜாதகர் முன்னேறுவார். சங்கீதமேதையாவார்.

4ல் குரு சுக்கிரன் இருந்தால் வீடு, வாகனம் ஸ்திரசொத்து போன்ற சகலவசதியும் கிட்டும் பெரும்யோகமாகும். 5ல் இருந்தால் அழகான பிள்ளைகள், ஆண்டவன் அருள், ஐஸ்வரியம் என்பனகிட்டும். 9ல் இருந்தால் ஜாதகர் உயர்பதவிகள் வகிப்பார். 10ல் இருந்தால் பிரபலமான தொழில்களில் ஜாதகர் ஈடுபடுவார். தீர்த்தயாத்திரை, தெய்வகாரியம் என்பவற்றிலும் அதிக நாட்டம் இருக்கும். 11ல் இருந்தால் லக்ஷ்மிகடாக்ஷம் கிட்டும். சுயசம்பாத்தியத்தில் நல்வாழ்வு வாழ்வர். குரு சுக்கிரன் 6, 8, 12ம் இடங்களிலிருப்பின் நற்பலன் செய்யா.

களத்திர ஸ்தானாதிபதியான சுக்கிரன் களத்திர ஸ்தானமான ஏழில் தனித்துஇருப்பின் மனைவி சுகம் திருப்தியாய் இருக்காது; ஆனால் குருவுடன் சுக்கிரன் சேர்ந்து ஏழில் இருந்தால் யோகமாகும். பத்தரை மாத்து தங்கம்போல் பருவ மங்கை மனைவியாக வாய்ப்பாள். மனைவியால் அதிஷ்டம் ஐஸ்வரியம் என்பன உண்டாகும். மேடம், சிங்கம், தனுசு, மகரம், கும்பம் ஆகிய லக்கினங்களுக்கு 7ல் குரு சுக்கிரன் களத்திர யோகத்தைத் தரும். கன்னிக்கு 7ல் உச்சசுக்கிரனும் ஆட்சிபெற்ற குருவும் சேர்வது விசேடயோகமாகும். ஆனால் மிதுனத்திற்கு 7ல் குரு சுக்கிரன் அமைப்பு கெடுதலையே செய்யும். ஏனெனில் 5-ம் அதிபதி சுக்கிரன் 7ல் இருப்பது களத்திர தோஷத்தையே கொடுக்கும். மேலும் குரு பாதகாதிபதி கேந்திராதிபதி தோஷமடைவதால் இருவரும் சேர்வது நன்றல்ல. மனைவிசுகம் திருப்திதராது.

## பயிர்ச் செய்கையில் நற்பலன்

சலராசியாகிய கடக, விருச்சிக, மீன ராசிகளில் சந்திரன் உலாவும்போது பயிர்ச்செய்கையில் ஈடுபடுவது நற்பலனைத்தரும். பிருதுவி வீடாகிய இடப, கன்னி, மகர ராசிகளில் சந்திரன் உலவும்போது கிழங்குவகை பயிரிடுவது மிக்க நல்லபலனைக் கொடுக்கும். அமாவாசைக்கு முன் இரண்டுதினங்களிலும் அல்லது பௌர்ணமிக்கு முன் இரண்டு தினங்களிலும் பயிரிடுகை நற்பலனைத் தரும்;

வே. இ.

# சோதிடம் கற்போம்

"ஞானி"

## சுப யோகங்கள்

(சென்ற இதழ் தொடர்)

### 9. சக்கர யோகம்

இலக்கினம் முதலாக எல்லா ஒற்றை இராசிகளிலும் தவறுமல் கிரகங்கள் நின்றுல் சக்கர யோகம் ஏற்படும். கிரகமாலிகா யோகத்திற்கு கூறிய பலன் இந்த யோகத்திற்கும் பொருந்தும்.

### 10. சுபமாலா யோகம்

எல்லாக் கிரகங்களும் ஐந்து, ஆறு, ஏழு என்னும் மூன்று தானங்களிலும் இருந்தால் சுபமாலா யோகம் கிட்டும். இதனுல் புத்திர களத்திர சுகம், அரச சன்மானம், பரோபகாரம் போன்ற பலன்கள் ஏற்படலாகும்.

### 11. நீசபங்க ரர்சயோகம்

ஒரு கிரகம் நீசமானுல் நீசன் நின்ற இராசி நாதன் அல்லது அந்த இராசிக்குரிய உச்சக் கிரகம் ஆட்சியாய்ச் சந்திர கேந்திரம் பெறின் நீசபங்கராசயோகம் உண்டாகும்.

சில நூல்களின் பிரகாரம் சந்திர கேந்திரம் பெறுவதே இந்த யோகத்தைக் கொடுக்கும் என்றும், ஒருகிரகம் நீசபங்கமான சாதகத்தில் வேறும் நீசக் கிரகங்களிருப்பின் அவையும் நீசபங்கமடையும் என்றும் கூறும்.

இந்த யோகம் ஏற்படுவதினுல் நீசக் கிரகம் கொடுக்கும் கஷ்டபலன் சாந்திப்படுவதுடன் அக் கிரகங்களுக்குரிய காரகங்கள் மூலம் சாதகன் மேன்நிலை அடைவான்.

### 12. பர்வத யோகம்

உதயலக்கினத்திலும் அதற்குக் கேந்திரத் தானங்கள் மூன்றிலும் கிரகங்கள் நின்றுல் பர்வத யோகமெனப்படும். இதனுல் கீர்த்தி, வாகன பலன், சுகானுபவம், ஸ்திரீசுகம் ஆகிய பலன்களேற்படும்.

### 13. சிவயோகம்

ஐந்தாதிபன் ஒன்பதிலிருக்க, ஒன்பது பதிதாதிபர்கள் ஐந்திலிருப்பது சிவயோகம் எனப்படும்.

### 14. இராசயோகம்

தன்ம கன்மாதிபர் இருவரும் சேர்ந்து நல்ல பாவங்களிலிருத்தல் இராச யோகமாகும். கீர்த்தி பாக்கிய விருத்தி, தேவபக்தி, நற்கரும விருப்பு என்பன இதன் பலனுகும்.


கேந்திராதிபராயுள்ள எவரும் திரிகோணுதிபராயுள்ள எவரோடும் சேர்ந்து துர்க்கிரக சம்பந்தமின்றி நல்ல பாவங்களிலிருத்தலை சிலர் இராசயோகம் என்பர். வெகுசன மரியாதை, சகலதுறைகளிலும் முன்னேற்றம் போன்றன இதன் பலனுகும்.

### 15. பரிவர்த்தன யோகம்

இரு கிரகங்கள் ஒருவருக்கொருவர் வீடு கொடுத்து மாறியிருப்பது (பரிவர்த்தனம் செய்வது) பரிவர்த்தன யோகமாகும். மூன்று, ஆறு, எட்டு, பன்னிரண்டாம் இடங்கள் தவிர்ந்த ஏனைய வீட்டதிபர்கள் வீடுகொடுத்து மாறியிருப்பது பரிவர்த்தன மகா யோகம் எனப்படும். இலட்சுமி கடாட்சம், தனப்பெருக்கம், அரசருதவி வாகன லாபம், புத்திரச் சிறப்பு போன்ற பலன்கள் இதனுல் ஏற்படும்.

மூன்றும் வீட்டதிபர் ஆறு, எட்டு, பன்னிரண்டு தவிர்ந்த ஏனைய வீட்டதிபரோடு பரிவர்த்தனஞ்செய்தல் கலயோகமாகும், இது மத்திம பலனுக்குரிய யோகமாகும்.

(வளரும்)




## இ. கந்தையா, கரம்பன், ஊர்காவற்றுறை.

### 16-12-86 முதல் 13-1-87 வரை

பின்வரும் இராசிப்பலன்கள் இம்மாதக் கிரகசாரத்தை யொட்டியே தரப்பட்டிருக்கின்றன. ஒரு சாதகரின் பலன்கள் அவரின் நட்சத்திர உடுதசா நிர்ணயத்தை ஒட்டியே ஏறக்குறைய முக்கால் பங்கு அமையும். கிரகசார பலன் கால் பங்கு வீதமே கிட்டத்தட்ட ஒரு வரைப் பாதிக்கும். இதை மனதில் வைத்து பின்வரும் பலன்களை வாசித்துப் பயன் பெறவும். இங்கு இராசி என்று குறிப்பிடுவது ஜனன காலத்தில் சந்திரன் இருந்த இராசியேயாகும்.



## மேடம்

அசுவினி, பரணி, கார்த்திகை 1-ம் கால்

மேடராசியில் பிறந்தவர்களுக்கு இந்தமாதம் சூரியபகவான் 9ல் தாம்ரமூர்த்தியாகிப் பலக்குறைவுடன் சஞ்சாரம் செய்கின்றார். பொதுவாக இவர்களின் உடல்நலம் அடிக்கடி பாதிப்புறச் செய்யும். வருமானம் சற்று அதிகரிக்கும். வீட்டில் மங்கலமான சுப சந்தோஷ கொண்டாட்டங்களும் இடம்பெறும். அநாவசியமான செலவுகளும் ஏற்படவே செய்யும். முயற்சிகள் தடை தாமதங்களின் மேல் கைகூடும். இராசாங்க உதவிகள் குறைவுறும். பூமிலாபம்- விற்றல்- வாங்கல் மூலம் லாபமும் கிடைக்கும். எவ்வாறாயினும் குருவும் செவ்வாயும் சுபகோசார சஞ்சாரம் செய்தலின் இறுதியில் எல்லாம் நன்மையாகவே இருக்கும்.

குடும்பத்தவர்களுக்குக் கணவன் மனைவி பிணக்குகள் அடிக்கடி ஏற்படும். புத்திரர் பெரியவர்களின் உதவிகள் கிடைக்கும். குடும்பவருமானம் திருப்திதரும்.

வர்த்தகர்களுக்குப் பழைய முதலீடுகளில் வருமானம்கூடும். பழையநிலுவைக் கடன்களும் கைக்குக்கிடைக்கும். கடல்கடந்த வியாபாரிகள் அதிக லாபம் பெறுவர். வங்கிநிதி திருப்தியளிக்கும்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகள் அடிக்கடி தொல்லைகள் கொடுப்பார்கள். உத்தியோகத்தர்களின் உதவிகள் கிடைக்கும். வசதியான இடமாற்றங்கள் கூடச்சிலருக்குக் கிடைக்கும்.

விவசாயிகளுக்குப் பயிர் உற்பத்திச் செலவுகள் அதிகரிக்கும். விவசாயப் பண்ணைகளில் கூலியாட்களின் ஒத்துழைப்புக் குறைவுறும். விளைவுகள் கணிசமான அளவு குறைவுறும்.


தொழிலாளர் மத்தியில் வேலைவாய்ப்புக்கள் குறைவதால் அமைதி ஏற்படமாட்டாது. தொழிலாளருக்கு வருமானம் குன்றும். தினச்சம்பள வேலையாட்களுக்குச் சீவியக்கஷ்டம் தொடரும்.

மாணவர் கல்விமுன்னேற்றம் தொடரும். சட்டத்துறைமாணவர் விசேடமுன்னேற்றம் பெறுவர். சிலருக்கு உயர்கல்வி வாய்ப்பும் கிடைக்கும்.

பெண்களுக்கு எண்ணங்கள் பொதுவாக நிறைவுபெறும். விவாகமுயற்சிகள் பெரும்பாலும் கைகூடிவரும். குடும்பப்பெண்களுக்குக் கணவன்மாரின் அன்பும் அரவணைப்பும் கிடைக்கும்.

அதிஷ்டநாட்கள்: டிசெ 16பி.ப,17,18,22,23,31
ஜன 1கா,3ப,4,5கா,8,9,12இர

துரதிஷ்டநாட்கள்; டிசெ 24,25,28ப,29,30காலை
ஜன 5பகல்,6,7பகல்




கார்த்திகை 2,3,4 ரோகிணி, மிருகசீரிடம் 1,2-ம் கால்

இடபராசியில் பிறந்தவர்களுக்குச் சூரியபகவான் அட்டமத்தில் 8ல் ரஜஸமூர்த்தியாகி வலம் வருகிறார். சூரியன் தானபலம் குறைந்தாலும் மூர்த்திபலம் பெறுவது நன்மையாகும். கடந்த காலங்களிலும் பார்க்க ஒரளவு மனநிறைவு பெறுவர். பொதுவாக இவர்களின் உடல்நலம் குடும்பநலம் என்பன சீராகஇருக்கும். பொருள் வருமானமும் ஒரளவு முன்னேறும். இராசாங்க அதிகாரிகளால் அவ்வப்போது உதவிபெறுவர். சிலருக்கு வெளிநாட்டுப் பிரயாணவசதிகளும் கிடைக்கும். தூரதேசப் பொருள்வரவு - மேற்கு - தென்மேற்குத்திக்குகளில் அனுகூலங்கள் ஏற்படும்.

குடும்பத்தில் சிறுசிறு பிணக்குகள் அவ்வப்போது தோன்றிமறையும். ஆனல் குடும்பவருமானம் அதிகரிக்கவே செய்யும். இனசன பந்துக்களுடன் பகைவிரோதங்களும் ஏற்படும்.

வர்த்தகர்களுக்கு மாதஆரம்பத்தில் மந்தநிலையில் இருந்த வியாபாரம் மாதக்கடைசியில் சுறுசுறுப்படையும். முதலீடுகளினல் வருமானம் குன்றும். புதியமுதலீடுகளைத் தவிர்த்தல் நல்லது.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் உத்தரவுகளைச் செயற்படுத்துவதில் சிரமங்கள் ஏற்படும். உத்தியோகத்தர்களின் உதவி ஒத்தாசைகள் கிடைக்கும்.

விவசாயிகளுக்கு இயற்கை - செயற்கை ஏதுக்களால் பயிரழிவு தொடரும். விவசாயப்பண்ணைகளில் உற்பத்திச்செலவும் அதிகரிக்கும். கூலியாட்கள் வராமலேவிட்டாலும் ஆச்சரியமில்லை.

தொழிலாளர் பிணக்குகள் வலுவடையும். வேலைநிறுத்தம் முதலானவை வேலைவாய்ப்புக்களைக் குறைக்கும். ஒப்பந்தத் தொழில்களாலும் வருமானம் பெறுதல் கேள்விக்குறியேயாகும்.

மாணவர் கல்விமுன்னேற்றம் பெறுவர். கணிதவிஞ்ஞானத்துறை மாணவர் விசேடதேர்ச்சி பெறுவர். சிலருக்குப் புலமைப்பரிசு அல்லது வெளிநாட்டுக்கல்வி வாய்ப்பும் கிடைக்கும்.

பெண்களுக்கு ஆசைகளை அடக்கவேண்டிய காலம். குடும்பப்பெண்களுக்கு கணவன் மனைவி கருத்துமோதல்கள் அடிக்கடி இடம்பெற்றாலும் விவாகமுயற்சிகளில் காலநீடிப்பும் தொடரும்.

அதிஷ்டநாட்கள்: டிசெ 16மு.ப,19,20,24,25
ஜன 1ப,2,3அ.கா,5ப,6,7,11

துரதிஷ்டநாட்கள்: டிசெ 26கா,27,28கா,30ப,31
ஜன: 1கா,7இ,8,9,10அ.கா




மிருகசிரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3

இவ்விராசியில் பிறந்தவர்கட்கு இம்மாதம் சூரியபகவான் 7ல் லோகமூர்த்தியாகிப் பலக்குறைவுடன் சஞ்சாரம் செய்வது நன்மைதராது. இவர்களின் உடல்நலம் அடிக்கடி பாதிப்படையும். குடும்பநலமும் குறையவே செய்யும். வருமானமும் வீழ்ச்சியடையும். எதிர்பாராத திடீர் நெருக்கடிகள் திடீர்ப் பிரயாணம் முதலியவற்றுல் வருவாய்க்கு மிஞ்சிய செலவுகளும் ஏற்படும். சிலருக்கு இராசதண்டனைகள்கூடக் கிடைக்கும். பிதிர்கருமம் பிதிர்வழித் துக்கசம்பவங்களும் சிலருக்கு இடம்பெறவும் கூடும். அந்நியர் உதவி அந்நிய தேசப் பொருள்வரவு முதலானவையும் ஏற்படும். குருபகவான் கேந்திராதிபனுக திரிகோணத்தில் இருந்து திருஷ்டி வலிமைபெறுவதால் எதையும் சமாளித்துக்கொள்ளுவார்கள்.

குடும்பத்தின் வருமானம் அதிகரிக்கும். கணவன் மனைவி உறவு திருப்தியளிக்கும். புத்திரர் உதவிகள் அவ்வப்போது கிடைக்கும். வீட்டில் சுபமங்கள கொண்டாட்டங்கள் கூட நிகழும்.

வர்த்தகர்களுக்கு முதலீடுகளின் வருமானமும் இம்மாதம் திருப்திதராது. கூடியவரை புதிய முதலீடுகளைத் தவிர்த்தல் நல்லது. வங்கி நிதிவசதிகள் கிடைக்கும்.

உத்தியோகத்தர்கட்குச் சோதனையானகாலம். அதிகாரிகளின் சீற்றங்களுக்கு அடிக்கடி ஆளாக வேண்டி நேரிடும். பதவி உயர்வுக்குப் பதில் பதவிப் பொறுப்புக்களே கூடும்.

விவசாயிகளுக்கு பயிர்விளைவு திருப்திதரும். விவசாயப் பண்ணைகளிலும் வருமானம் கூடும். பசளை அரசமான்யம் முதலியன உரியகாலங்களில் கிடைக்கும். சந்தை வாய்ப்பும் திருப்திதரும்.

தொழிலாளர் மத்தியில் தொழில் ஒற்றுமை ஏற்படும். வேலைவசதிகளும் கிடைக்கும். நாட்சம்பள வேலைசெய்வோருக்கும் சீவியவசதிகிடைக்கும். தொழில் ஒப்பந்தவேலைகளிலும் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும்.

மாணவர் கல்விமுன்னேற்றம் பெறுவர். கணிதத் துறை சட்டத்துறை மாணவர் விசேட முன்னேற்றம் பெறுவர். கல்வி மேலதிகாரிகளின் ஆதரவும் இவர்களுக்குக் கிடைக்கும்.

பெண்கள் பெரும்பாலும் மனநிறைவு பெறுவர். கன்னிப்பெண்களின் விவாக முயற்சிகள் சிரமங்களுக்கு மத்தியிலும் நிறைவுபெறும். குடும்பப் பெண்களுக்குக் கணவன்மாரின் அன்பும் அரவணைப்பும் கிடைக்கும்.

அதிஷ்டநாட்கள்: டிச: 16பி.ப.17.18.21ப.22.23.
ஜன: 3பக. 4.5காலை. 7இரவு8.9.10

துரதிஷ்டநாட்கள் டிச: 16மு.ப.28ப.29.30கா.
ஜன. 1பக. 2.3 அ.கா. 11.12பக.




புனர்பூசம் 4-ம் கால், பூசம், ஆயிலியம்

இந்த இராசியில் பிறந்தவர்களுக்கு இந்த மாதம் சூரியபகவான் 6ல் தாம்ர மூர்த்தியாகிப் பவனி வருகிறார். சூரிய பகவான் மூர்த்திபலம் குறைந்தாலும் கோசார தானபலம் பெறுவது ஓரளவு நன்மையாகும். பொதுவாக இவர்கள் உடல்நலம் அடிக்கடி பாதிக்கப்படும். குடும்ப நலம் சீராக இருக்கும். வருமானத்திலும் பார்க்க செலவுகள் கூடும். எதிர்பாராத திடீர் நெருக்கடிகள் கூட இவர்களுக்கு ஏற்படும். எடுத்த முயற்சிகள் பெரும்பாலும் தடைதாமதங்களுடன் சிரமங்களைக் கொடுக்கும். அட்டமத்தில் குருவும் செவ்வாயும் இருப்பது விபத்து அவமிருத்துப் பயங்களைக் கூடக்கொடுத்தாலும் ஆச்சரியமில்லை. பொதுவாகக் கடந்தகாலங்களிலும் பார்க்க இந்த மாதம் இவர்களுக்கு தீயபலன்களே அதிகம் நிகழும். தெய்வபக்தி வழிபாடுகளால் எதனையும் சமாளித்துக் கொள்ளலாம்.

குடும்பத்தில் வருமானம் திருப்தி தரும். ஆனால் குடும்பத்தில் சிறு பிணக்குகள் அவ்வப்போது தோன்றி மறையும். குடும்பத்தில் எதிர்பாராத திடீர் துன்பசம்பவங்கள் நிகழக்கூடும்.

வர்த்தகர்களுக்கு முதலீடுகளில் வருமானம் பெருமளவில் குறைவுறும். ஊழியர்களின் கருத்து வேற்றுமையால் வியாபார மந்தநிலையும் நட்டமும் ஏற்பட இடமுண்டு.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் நல்லெண்ணம் கிடைக்கும். ஆனால் உத்தியோகப் பொறுப்புக்கள் அதிகரிக்கும். சிலருக்கு பதவி மாற்றங்கள் கூட ஏற்படலாம்,

விவசாயிகளுக்கு பயிர் உற்பத்திச் செலவு அதிகரிக்கவே செய்யும். இயற்கை-செயற்கை ஏதுக்களால் பயிரழிவும் ஏற்படும். விவசாயப் பண்ணைகளில் செலவுகள் அதிகரிக்கும்.

தொழிலாளர் வேலைவசதிகள் பெறுவர். நாள் சம்பள வேலை செய்வோருக்கும் சீவியத்துக்குப் போதுமான வேலை கிடைக்கும். ஒப்பந்த வேலைகளில் லாபம் குறைந்தாலும் நட்டம் வராது.

மாணவரின் கல்வி முன்னேற்றம் தடைப்படும். ஆசிரியர்-மாணவர் ஒத்துழைப்புக் குன்றும். மாணவர் மத்தியில் வெறுப்பு அமைதியின்மை மறதி முதலான குணநிலை தோன்றும்.

பெண்களுக்குப் பிரச்சினைகள் ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். கன்னிப் பெண்கள் தங்கள் எதிர்காலத்தில் நம்பிக்கை வைத்து முன் எச்சரிக்கையாக இருக்கவேண்டிய காலம். குடும்பப் பெண்களுக்கு பொறுப்புக்கள் கூடும்.

அதிஷ்டநாட்கள்: டிசெ. 16மு.ப.19,20,21மு.ப,
ஜன. 5பக.6,7பக, 10அ.கா.
துரதிஷ்டநாட்கள்: டிசெ. 16பி.ப.17,18,30ப 31
ஜன. 1காலே.3பக. 4,5காலே



## சிங்கம்

மகம், பூரம், உத்தரம் 1-ம் கால்

இங்கராசியில் பிறந்தவர்களுக்கு இந்தமாதம் சூரியபகவான் 5ல் சுவர்ண மூர்த்தியாகிப்பலம் பெறுவது நன்மையாகும். குருபகவானின் திருஷ்டி பலமும் இவர்களுக்கு அனுகூலங்களேயே கொடுக்கும். தேகசுகம் - குடும்பசுகம் என்பன அபிவிருத்தியடையும். பொருள்வருமானத்திலும் முன்னேற்றம் ஏற்படும். முன்புதடைப்பட்டிருந்த காரியங்களில் சாதகமான வெற்றியும் பெறுவர். இராசாங்க உதவிகளும் கிடைக்கும். வீட்டில் சுபசந்தோஷ கொண்டாட்டங்களும் நிகழஇடமுண்டு. எனினும் 7ல் செவ்வாயும் 4ல் சனியும் 2ல்கேதுவும் எதிர்பாராத திடீர்நெருக்கடிகள் பொருள் நட்டம் வாக்குவிரோதம் முதலானவற்றையும் எதிர்நோக்கவேண்டியும் இருக்கும்.

குடும்பத்தவர்களுக்குக் கணவன்மனைவி உறவு அபிவிருத்தியடையும். வீட்டில் மங்கல கொண்டாட்டங்கள் இடம்பெறும். குடும்பத்தில் அமைதி நிலவும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரத்தில் முன்னேற்றம் குறைந்தாலும் நட்டம் ஏற்படமாட்டாது. பழையநிலுவைக் கடன்களில் சில கைக்குக்கிடைக்கும். வங்கிநிதி இருப்பு ஓரளவு திருப்திதரும்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் நன்மதிப்புக்கிடைக்கும். சிலருக்குப் பதவிஉயர்வு கூடக்கிடைக்கும். பதவியும் உறுதிப்படுத்தப்படும்.

விவசாயிகளுக்கு பயிர்உற்பத்திச் செலவுகள் அதிகரிக்கும். இயற்கைப்பாதிப்புக்கள் முதலியவற்ருல் பயிர்ச்செழிப்புக் குறையும். ஆனல் விளைவுகளுக்கு நியாயமான சந்தைவாய்ப்பும் உண்டு.

தொழிலாளர் வேலைவசதிகள் கிடைத்தாலும் தினச்சம்பள வேலையாட்களின் சீவியக்கஷ்டம் ஏற்படாது. தொழில் ஒப்பந்தவேலைகளிலும் நட்டம் ஏற்படஇடமில்லை.

மாணவர் கல்விஊக்கம் வலுவடையும். பரீட்சைகளில் சிறப்புச்சித்தியும்பெற வாய்ப்புக்கள் ஏற்படும். மருத்துவத்துறை மாணவர் விசேடமுன்னேற்றம் பெறுவர்.

பெண்களுக்குச் செவ்வாய் ஏழில் இருப்பது நல்லதல்ல. குடும்பப்பெண்களுக்கு கணவன் மனைவி பிணக்குகள் கூட ஏற்படலாம். உத்தியோகம் பார்க்கும் பெண்களுக்கு உயர்ச்சிகிடைக்கும்.

அதிஷ்டநாட்கள்: டிசெ 17,18,22,23,27,30ப,31
ஜன 1கா,7இரவு,8,9
துரதிஷ்டநாட்கள்: டிசெ 19,20,21மு.ப
ஜன 1பகல்,2,5பகல்,6,7பகல்



## கன்னி

உத்தரம் 2,3,4, அத்தம், சித்திரை 1,2கால்

இந்தராசியில் செனனமானவர்களுக்கு இந்த மாதம் சூரியபகவான் 4ல் ரஜஸமூர்த்தியாகிப் பவனிவருகிருர். சூரியன் மூர்த்திபலம் பெறுவது நன்மையாகும். இவர்களுக்குக் கடந்த காலங்களிலும் பார்க்க இந்தமாதம் நற்பலன்கள் அதிகரிக்கும். இவர்களின் உடல்நலம் திருப்தியளிக்கும். பொருள் வருமானமும் கணிசமான அளவு முன்னேற்றம் பெறும். பூமிலாபம், விற்றல் வாங்கல் லாபங்களும் கிடைக்கும். சிலருக்கு வெளிநாட்டுப் பிரயாண வசதிகளும் கிடைக்கும். எனினும் குருபகவானின் கோசார சஞ்சார பலம் குன்றுவதால் குரு முதலிய பெரியவர்களுடன் பகைவிரோதம், விபத்து முதலான பலன்களும் கலந்து நிகழ இடமுண்டு.

குடும்பத்தில் கணவன் மனைவி நல்லுறவு விருத்தியாகும். குடும்ப வருமானம் திருப்தியளிக்கும். புத்திரர் உதவிகள் கிடையாது. ஆனல் சகோதரர் உதவிகள் கிடைக்கும்.

வர்த்தகர்களுக்குப் பழைய முதலீடுகளின் வருமானம் பெருமளவில் குறைவுறும். வியாபாரம் மந்தநிலை ஏற்படும். நிதிவசதிகள் குறைவுறும். புது முதலீடுகளைத் தவிர்த்தல் நல்லது.

உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் பாராட்டுகளும் கிடைக்கும். சிலருக்கு பதவி

உயர்வு கிடைக்கும். உடன் ஊழியர் விஷயங்களில் முன் எச்சரிக்கை இவர்களுக்குத் தேவை.

விவசாயிகளுக்குப் பயிர்ச் செழிப்பு ஏற்படும். விவசாயப் பண்ணைகளிலும் வருமானம் கூடும். பயிரழிவுகள் ஏற்படினும் போதிய விளைச்சலுடன் நல்ல சந்தை வாய்ப்பும் கிடைக்கும்.

தொழிலாளர் மத்தியில் மனநிறைவு ஏற்படும். தினச்சம்பள வேலை செய்பவர்களுக்கும் போதிய வருமானம் கிடைக்கும். தொழில் ஒப்பந்த வேலைகளும் நல்ல லாபம் தரும்.

மாணவர் கல்வித் தடைகளுக்கிடையிலும் சுயமுயற்சியுடன் முன்னேற்றம் பெறுவர். அழகியற்கலை இரசாயனக் கலைத்துறை மாணவர் விசேட தேர்ச்சி பெறுவர்.

பெண்களுக்குப் பலப்பல சிக்கல்கள் அவ்வப்போது தோன்றும். குடும்பப் பெண்களுக்குக் கணவன்மார் பிரச்சனைகள் கொடுப்பார்கள். குடும்பச் செலவுகள் அதிகரிக்கும்.

அதிஷ்டநாட்கள்: டிசெ. 19,20,24,25,29
ஜன. 1பக.2,11,12பக.

துரதிஷ்டநாட்கள்: டிசெ. 21பி.ப.22,23
ஜன. 3ப.4,8,9




சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3,

துலாம் இராசியில் பிறந்தவர்களுக்கு இந்த மாதமும் சூரிய பகவான் 3ல் லோகமூர்த்தியாகி மூர்த்திபலமிழந்து சஞ்சாரம் செய்கின்றார். மூர்த்தி பலம் இழந்தாலும் இவர் கோசாரசஞ்சார பலம் பெறுவது நன்மையாகும். மேலும் இந்தராசியை திரிகோண பார்வையாகக் குருபகவான் திருஷ்டி செய்வதும் கவனிக்கப்படவேண்டும். பொதுவாக இவர்களுக்கு நன்மைகலந்த தீய பலன்கள் நிகழும். உடல்நிலை சீராக இருக்கும். குரு முதலிய பெரியவர்களின் ஆதரவும், உதவி ஒத்தாசைகளும் கிடைக்கும். இனசன பந்துக்கள் வருகை கொண்டாட்டங்களும் இவர்கள் குடும்பத்தில் நிகழும். வருமானத்திலும் செலவுகள் அதிகரிக்கும். வாக்கு விரோதம், பிரயாணம் போன இடங்களில் துன்பம் முதலியனவும் நிகழும்.

குடும்பத்தில் பெரும்பாலும் பிணக்குகள் அவ்வப்போது தோன்றி மறையும். குடும்ப வருமானத்திலும் செலவுகள் அதிகரிக்கும். கணவன் மனைவி நல்லுறவு ஏற்படும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் விறுவிறுப்பாக நடப்பினும் லாபக்குறைவு ஏற்படும். பழைய முதலீடுகளிலும் வருமானம் எதிர்பார்த்த அளவு கிடையாது.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகள் நெருக்கடிகள் கொடுப்பார்கள். சிலருக்கு பதவிப் பளு தாங்கமுடியாது திண்டாட நேர்ந்தாலும் ஆச்சரியமில்லை.

விவசாயிகளுக்கு பயிர்ச்சேதம் தொடரும். விவசாயப் பண்ணைகளிலும் வருமானம் குன்றும். உற்பத்திச் செலவுகள் அதிகரிப்பால் கடன் பயமும் இவர்களுக்கு ஏற்படும்.

தொழிலாளர் முதலாளிமார் பிணக்குகள் அடிக்கடி ஏற்படும். வேலைவாய்ப்புகள் கிடைத்தாலும் உரிய சம்பளம் பெறுவதில் சிரமங்கள் ஏற்படும்.

மாணவர் கல்வியில் குழப்பநிலை தொடரினும் சுயமுயற்சியால் குறிப்பிடக் கூடிய கல்வித் தேர்ச்சி பெறுவர். கணிதத்துறை மாணவருக்கு சிறப்புச் சித்தியும் கிடைக்கும்.

பெண்களுக்கு மனநிறைவான காரியங்கள் நிகழும். விவாக முயற்சிகளும் காரிய சித்தியடையும். குடும்பப் பெண்களுக்குக் கணவன் மாரின் அன்பும் அரவணைப்பும் கிடைக்கும்.

அதிஷ்டநாட்கள்: டிசெ. 17,18.22,23,27
ஜன. 1கா. 3பக.4,13

துரதிஷ்டநாட்கள்: டிசெ: 16மு:ப: 24,25
ஜன. 5பக.6,7,11,12பக




விசாகம் 4-ம் கால், அனுஷம், கேட்டை

விருச்சிகராசியில் பிறந்தவர்களுக்கு இந்த மாதம் சூரிய பகவான் 2ல் தாம்ர மூர்த்தியாகிப் பலக்குறைவுடன் வலம் வருவது நன்மை அதிகம் தராது. பொதுவாக இவர்களின் உடல்நலம் குன்

றும். எந்த முயற்சியிலும் அலைச்சலும் தடைதாமதங்களும், வீண்பொருள் விரையமும் ஏற்படும். எதிர்பாராத திடீர் நெருக்கடிகள் ஏற்படுதலால் சிந்தனைக் குறைவும், கோபகுணமும் இவர்களுக்கு ஏற்படும். ஏழரைச் சனீஸ்வரனின் குரூர கோசார சஞ்சாரம் நிகழும் காலமாதலின் சிறைப் பயம் கூடச் சிலருக்கு ஏற்பட்டாலும் ஆச்சரியமில்லை. சனிதசை, சனிபுத்தி, சனிஅந்தரம் நிகழுபவர்களுக்குத் தெய்வ பக்திதான் சாந்திதரும். மற்றவர்கள் அதிகம் பாதிப்படைய மாட்டார்கள்.

குடும்பத்தில் பிணி - பீடைகள் அடிக்கடி ஏற்படும், குடும்பத்தில் அமைதிக்குறைவு ஏற்படும். எதிர்பாராத திடீர்நெருக்கடிகள் வருவாய்க்குமிஞ்சிய செலவுகளை ஏற்படுத்தும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தநிலையடையும், ஊழியர் ஒத்துழைப்புக்குறைவுடன் வாடிக்கையாளரின் வருகையும் குன்றும். வங்கி நிதி இருப்பும் குறைவுறும்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகள் திடீர் திடீர் உத்தரவுகளைக் கொடுத்து வேலைப்பழுவைக் கூட்டுவார்கள். சிலருக்குக் கஷ்டப்பிரதேச இடமாற்றம் கூடக்கிடைக்கும்.

விவசாயிகளின் உற்பத்திச்செலவு அதிகரிக்கும், விவசாயப்பண்ணைகளின் விளைவும் குறையும். விளைவுகளுக்கு நியாயமான சந்தைவாய்ப்பும் கிடையாது. இவர்களின் வாழ்க்கைத்தரமும் குன்றும்.

தொழிலாளர் மத்தியில் கட்சிப்பூசல்கள் பிணக்குகள் அடிக்கடி ஏற்படும். வேலைவாய்ப்புக்குப் பதில் வேலைஇழப்புக்கள் அதிகரிக்கும். தொழில்ஒப்பந்த வேலைகளும் லாபம்தரமாட்டா.

மாணவர் கல்விமுன்னேற்றத் தடைகள் அதிகம் இடம்பெறும். மாணவர் எதிலும் எதையோ பறிகொடுத்த மனநிலையில் தத்தளிப்பர். கல்வித் தேர்ச்சியும் குன்றும்.

பெண்களுக்கு ஏமாற்றங்களும் சிரமங்களும் அடிக்கடி ஏற்படும். விவாகமுயற்சிகளும் சிரமங்களையே தரும். குடும்பப்பெண்களுக்குச் சிரமங்கள் அதிகரிக்கும். குடும்பச்செலவுகளால் கடன்பயமும் ஏற்படும்.

அதிஷ்டநாட்கள்: டிசெ 19,20,24,25,29
ஜன 1ப,2,5ப,6,7பக

துரதிஷ்டநாட்கள்: டிசெ 17,18,27
ஜன 7இரவு,8,9,13



# தனுசு

மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் கால்

தனுசு இராசியில் செனனமானவர்களுக்கு இந்த மாதம்சூரிய பகவான் சென்மத்தில் ரஜஸ மூர்த்தியாகி வலம்வருவது நன்மையாகும். பொதுவாக இவர்களின் உடல்நலம் சீராகஇருக்கும். வருமானமும் சுமாராக முன்னேற்றமடையும். காரிய சித்தியும் பெறுவர். குடும்பத்தில் அநாவசியச் செலவுகளும் ஏற்படும். குருவின் குரூரகோசார சஞ்சாரமும் ஏழரைச் சனீஸ்வரனின் காலமும் தொடருவதால் வீட்டில் சுபசந்தோஷக் கொண்டாட்டங்கள் நிகழவாய்ப்புக்கள் ஏற்படாமலும் போகலாம். தசாபுக்தி அந்தர பலமுள்ளவர்களுக்கு அதிகம் தாக்கம் ஏற்படாது.

குடும்பத்தில் சச்சரவுகள் இடைக்கிடை ஏற்படும். கணவன் மனைவி நல்லுறவும் கெடவே செய்யும். குடும்ப வருமானத்திலும் செலவுகள் கூடும்.

வர்த்தகர்களுக்கு பழையமுதலீடுகளில் லாபம் குறைவுறும். வாடிக்கையாளரின் வருகையும் வீழ்ச்சியுறும். வங்கிக்கையிருப்பும் குன்றும். புதுமுதலீடுகளைத் தவிர்த்தல் நல்லது.

உத்தியோகத்தர்களுக்கு பதவிச் சிறப்புகள் கிடைக்கும். சன்மச்சூரியன் (மூர்த்திபலம் பெற்றாலும் அதிகாரிகளின் கெடுபிடிகளுக்குப் பதிலாக) சகஉத்தியோகத்தர்களின் கருத்து மோதல்களுக்குள்ளாக நேர்ந்தாலும் ஆச்சரியமில்லை.

விவசாயிகளுக்குப் பயிர் அழிவு அதிகரிக்கும். உற்பத்திச் செலவுகளும் கூடும். விவசாயப்பண்ணைகளிலும் விளைவுகள் குறைவுறும். சந்தைவாய்ப்பும் குறைவுறும்.

தொழிலாளர் பிணக்குகள் வலுவடையும். சிலருக்கு வேலைநீக்கம் கூடக்கிடைக்கும். தினச்சம்பளத் தொழிலாளர் சீவனக்கஷ்டம் ஏற்படும்.

மாணவர் கல்விமுன்னேற்றம் பெரிதும் பாதிப்புறும். மாணவர் மத்தியில் ஏமாற்றமும் தோல்வி மனப்பான்மையும் தோன்றும். பரீட்சை முடிவுகளும் திருப்திதராது.

பெண்கள் மனத்தை அடக்கி நிதானமாகச் செயல்பட வேண்டிய மாதம். குடும்பப் பெண்களுக்குக் கணவன்மாரின் கெடுபிடிகளும் வீண் விரையமும் துன்பம் தரும்.

அதிஷ்ட நாட்கள் டிசெ: 22. 23. 27. 30ப. 31.
ஜன: 3பக. 7இரவு. 8.9.

துரதிஷ்ட நாட்கள் டிசெ. 19. 20. 28ப. 29.
ஜன: 11. 12பக.




உத்தராடம் 2, 3, 4, திருவோணம், அவிட்டம் 1,2,

மகரஇராசியில் பிறந்தவர்களுக்கு இம்மாதம் சூரியபகவான் 12ல் சுவர்ண மூர்த்தியாகி மூர்த்திபலம் பெறுவது நன்மையாகும். இவர்களின் உடல் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். பொருள் வருமானமும் முன்னேற்றமடையும். வீட்டில் மங்கல சந்தோஷ கொண்டாட்டங்களும் நிகழ இடமுண்டு. இராசாங்க அனுகூலங்கள் கிடைக்கும். காரியசித்தியும் பெறுவர். இனசன பந்துக்கள், புத்திரர்களின் உதவிகளும் தாராளமாகக்கிடைக்கும். வருமானத்தில் பெரும்பகுதி அநாவசியச் செலவுகளுக்குள்ளாகும். வெளிநாட்டுப்பயணங்கள் அல்லது புண்ணிய யாத்திரைப் பலன்கள் கூடச்சிலருக்குக் கிடைக்கும்.

குடும்பத்தில் கணவன் மனைவி நல்லுறவு வளரும். குடும்பவருமானமும் கூடும். புத்திரர் உதவிகள் கிடைக்கும். வாழ்க்கைத் தரமும் உயரும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் முன்னேற்றத்தில் வீறுநடைபோடும். முதலீடுகளில் இலாபம் கிடைக்கும். வங்கியில் நிதிவளரும். இருப்பு நிலுவைக்கடன்களும் வசூலாகும்.

உத்தியோகத்தர்களுக்குச் சூரியன் பலம் பெறுவது நன்மையாகும். அதிகாரிகளின் உதவிகள் கிடைக்கும். சிலருக்குப் பதவி உயர்வுகளும் கிடைக்கும்.

விவசாயிகளின் விளைவுகள் கணிசமானவரை அதிகரிக்கும். விவசாயப்பண்ணைகளின் விளைவும் வருமானமும் அதிகரிக்கும். இவர்களின் வாழ்க்கைத்தரமும் உயரும்.

தொழிலாளிகளுக்கு வேலைவசதிகள் கிடைக்கும். தொழில்ஒப்பந்த வேலைகளிலும் லாபம் அதிகரிக்கும். தொழிலாளர் மத்தியில் அமைதி ஓங்கும். வாழ்க்கை வசதிபெறும்.

மாணவர் கல்விஊக்கம் வளரும். கல்வித்தேர்ச்சியும் பெறுவர். புலமைப்பரிசில்கள் வெளிநாட்டுக் கல்விவாய்ப்புக்களும் சிலருக்குக் கிடைக்கும். சட்டத்துறை - கணிதத்துறை மாணவர் விசேடசித்தி பெறுவர்.

பெண்களுக்கு நினைவுகள் நிறைவுபெறுவதற்குச் சாதகமானகாலம். குடும்பப்பெண்களுக்குக் கணவன்மாரின் அன்பும் அரவணைப்பும் கிடைக்கும். வேலைக்குப்போகும் பெண்களுக்கு அதிகாரிகள் உதவிகள் கிட்டும்.

அதிஷ்டநாட்கள்: 24,25,27,29
ஜன 1ப,2,5ப,6,7ப,11,12ப

துரதிஷ்டநாட்கள்: டிசெ 17,18,22.23,30ப,31
ஜன 1கா,12இ,13




அவிட்டம் 3,4 சதயம், பூரட்டாதி 1, 2, 3-ம் கால்

கும்பராசியில் செனனமானவர்களுக்கு சூரியபகவான் 11ல் லோகமூர்த்தியாகி இந்தமாதம் வலம்வருகிறார். சூரியன் மூர்த்திபலம் குன்றுவது நன்மைக்குறைவையே கொடுக்கும். பொதுவாக இவர்களின் தேகாரோக்கியம் அடிக்கடி பாதிக்கப்படும். வருமானத்திலும் செலவுகள் அதிகரிக்கும். எந்தமுயற்சியும் தடைதாமதங்கள், அலைச்சல் மூலம் நிறைவுபெறும். அல்லது நிறைவுபெறாமலும் போகலாம். இனபந்துக்களுக்குள் துன்பம் முதலானவையும் நிகழலாம. வீட்டில் சந்தோஷ கொண்டாட்டங்கள் நிகழவாய்ப்பில்லை. காரியசித்தி - பதவிமுன்னேற்றம் - பிதிர்வழிச் சிறப்புக்களும் நிகழும்.

குடும்பத்தில் கணவன் மனைவி உறவுசீர்கெடும். குடும்பவருமானத்திலும் செலவுகள் அதிகரிக்கும். புத்திரர் உதவிகளும் கிடையாது.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் சுமாராக முன்னேறும். வங்கி - நிதி உதவிகள் குறைவுறும். நிலு

வைக் கடன்களும் ஓரளவு கைக்குவந்து சேரும். புதுமுதலீடுகளைத் தவிர்த்தல் நல்லது.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் தொல்லைகள் அடிக்கடி ஏற்படும். சகஉத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பு உதவிகளும் ஓரளவிலேயே கிடைக்கும்.

விவசாயிகளுக்கு பயிர் உற்பத்திச்செலவுகள் ஏறிக்கொண்டேபோகும். கூலியாட்கள் பிரச்சனை கொடுப்பர். கடன்பழுவும் ஏறும். வாழ்க்கைத்தரமும் குன்றும்.

தொழிலாளர் மத்தியில் ஒற்றுமைக்குறைவு ஏற்படும். தொழிற்பிணக்குகளும் ஏற்படும். வேலையிழப்பு அல்லது வேலையின்மை முதலிய பிரச்சினைகள் இவர்களை எதிர்நோக்கும்.

மாணவர் கல்விஊக்கம் பெறுவர். சுயமுயற்சியும் தன்நம்பிக்கையும் இவர்களின் முன்னேற்றத்திற்கு உதவும். பரீட்சைமுடிவுகள் ஓரளவு திருப்தி தரும்.

பெண்களுக்குச் சிரமங்களும் சிக்கல்களும் இந்தமாதத்தில் அடிக்கடி ஏற்படும். விவாகமுயற்சிகள் கேள்விக்குறியில் இருக்கும். குடும்பப்பெண்களுக்கு குடும்பபாரம் அதிகரிக்கும்.

அதிஷ்டநாட்கள்: டிசெ 17,18,27,30பகல,31
ஜன 3ப,4,8,9,12இ,13

துரதிஷ்டநாட்கள்: 19இ,20,24,25
ஜன 1பகல்,2




பூரட்டாதி 4-ம் கால், உத்தரட்டாதி, ரேவதி

மீனஇராசியில் பிறந்தவர்களுக்கு இந்தமாதம் சூரியபகவான் 10ல் சுவர்ணமூர்த்தியாகிப் பலம் பெறுவது நன்மையாகும். கடந்தகாலங்களில் பட்டகஷ்ட நட்டங்களிலிருந்து விடுபட்டு முன்னேற்றப்பாதையில் இவர்கள் அடிஎடுத்து வைப்பார்கள். உடல்நலமும் குடும்பநலமும் சிறப்பாக இருக்கும். செய்தொழிலில் முன்னேற்றமும் பெறுவர். விற்றல் வாங்கல் மூலமும் லாபம் பெறும். இனபந்துக்கள் கூட்டம் - பிரயாணம் போனஇடங்களில் மரியாதை வீடு- வாகனச்சிறப்பு முதலான பலன்கள் அதிகம் நிகழும். குருபகவான் விரையத்தில் சஞ்சாரம் செய்வது தவிர்க்கமுடியாத செலவுகளும் யாத்திரைப் பலன்களும் சிலருக்கு நிகழலாம்.

குடும்பத்தில் மனஅமைதியும் நிறைவும் ஏற்படும். மனைவிமக்களுக்குத் திடீர்ச்சுகவீனங்களும் ஏற்படும். குடும்பவருமானத்திலும் முன்னேற்றம் உண்டாகும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் முன்னேற்றம் அடையும். வாடிக்கையாளரின் வரவும் அதிகரிக்கும். வியாபாரம் நடப்பினும் நிதி நிலை நெருக்கடிகளும் ஏற்படும். முதலீடுகளைக் குறைப்பது நன்மைதரும்.

உத்தியோகத்தர்களுக்குப் பதவிஉயர்வு - பதவிச்சிறப்பு முதலான எல்லாவசதிகளும் கிடைக்கும். சகஊழியர்களின் ஒத்துழைப்புக்களும் கிடைக்கும். போக்குவரவல் அவதானம் தேவை.

விவசாயிகளுக்கு பயிர்ச்சேதம் ஏற்பட்டாலும் பயிர்விளைவும் அதிகம் பாதிப்படைய மாட்டாது. விவசாயப்பண்ணைகளில் வருமானம் கூடும். சந்தை வாய்ப்பும் கிடைக்கும்.

தொழிலாளிகளின் பிரச்சினைகள் பெருமளவில் குறையும். வேலைவசதிகளும் கிடைக்கும். தொழில் ஒப்பந்தவேலைகளிலும் லாபம் கிடைக்கும். வாழ்க்கைத்தரமும் உயரும்.

மாணவர் கல்விமுன்னேற்றம் காணும். சிலருக்கு வெளிநாட்டுக் கல்விவசதிகள் புலமைப்பரிசில்கள் கூடக்கிடைக்கும். மருத்துவத்துறை மாணவர் சிறப்புறுவர்.

பெண்களுக்குக் கடந்தமாதங்களிலும் பார்க்க முன்னேற்றம் பெறுவர். குடும்பப்பெண்களுக்குக் குடும்பசுகவீனங்கள் ஏற்படினும் அமைதிபெறுவர்.

அதிஷ்டநாட்கள்: டிசெ 19,20,29
ஜன 2,5ப,6,7ப,11,12பக

துரதிஷ்டநாட்கள்: டிசெ 22,23,27
ஜன 3ப,4,5காலை

அதிஷ்ட எண்ஞானம்

# 1987-ல் உங்கள் பலன் எப்படி?

இ. மகாதேவா, 140, செல்லர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

1987-ம் ஆண்டின் கதாநாயகர்கள் எண் ஆதிக்கம் 2-4-7ல் பிறந்தவர்களாவர். இவர்கள் இவ்வருடம் பல சிறப்புக்களை அடைவார்கள் 1-5-8ம் எண்காரர்கள் மத்திமபலனையும் ஏனையோர்கள் கஷ்டபலனையும் அடைவார்கள். 9-ம் எண்காரருக்கு காணி, வீடு, பணம் அழிந்தோ இழந்தோ போகும்.

### எண் 1: 1 10 19 28-ம் திகதிகளில் பிறந்தவர்கள்

இவர்களுக்கு திடீரென உயர்வும், தாழ்வும் ஏற்படும். வெளிநாட்டுப் பிரயாணங்களுக்கு வாய்ப்புக்கள் தேடிவரும். ஆனால் அவதானமாக முடிவுஎடுக்கவும். சகோதரங்களுக்கு உயர்வும் ஏட்டிக்குப் போட்டியான சூழ்நிலைகளும் ஏற்படும். திட்டமிட்ட குடும்பச்சுபகாரியங்கள் தாமதமாகி நிறைவேறும். தொழில் இடத்தில் புதியபொறுப்புக்கள் வந்துசேரும். புதியபங்குவியாபாரம் தொடங்க இடமுண்டு. சந்தர்ப்பத்தைத் தக்க சமயத்தில் பாவியுங்கள். நாட்டில் நடக்கும் சம்பவங்களால் பாதிக்கப்படுவீர்கள். திருமணப்பேச்சுக்களுக்கு ஆடி 1987க்குப் பின்பு நல்ல அறிகுறிகள் தென்படும். உத்தியோகத்தர்கள் பொருளில் அவதானமாக இருக்கவும். வழக்குகளில் சாதகமான சூழ்நிலை உருவாகும். மாணவர்களுக்கு படிப்பதில் சோம்பல் ஏற்படும். மேலும் அரசியல் தொடர்புகளால் கல்வியில் ஊக்கமின்மை ஏற்படும். விவசாயிகள் பயிர்பச்சையில் ஓரளவு சாதக நிலை அடைவர். வீட்டுச்செலவால் சிலர் கடன் படுவார்கள். பெண்களுக்கு 1987-ம் ஆண்டில் குடும்பத்தில் நல்ல வரவேற்பாக இருக்கும். பிரயாணங்களை அவதானமாகச் செய்யவும். சிலருக்கு அவமானங்கள், வழிப்பறிபொருள் இழப்புக்கள் ஏற்பட இடமுண்டு. இவர்களுக்கு மரணபயம் இருப்பதால் அவதானமாக இருக்கவும்.

### எண் 2: 2 11 20 29-ம் திகதிகளில் பிறந்தவர்கள்

இவர்களுக்கு முன்னேற்றமான காலமாகும். பயந்து, பயந்து செயற்படுத்தமுடியாது என எண்ணிய கருமங்கள் மெல்ல மெல்ல நிறைவேற்ற முயலுவீர்கள். திட்டமிட்டு எந்தவிஷயத்தையும் துணிந்து செய்தால் வெற்றிஅடைவீர்கள். சிலசமயம் கடன்படும்நிலை ஏற்பட்டாலும் பின்பு சமாளித்துக் கடன்களை அடைத்து விடுவீர்கள். குடும்பத்தில் சகோதரர்களுக்கு திருமணப்பேச்சுக்களைத் தொடக்கி முன்னெடுத்துச் செல்வீர்கள். தொழில் இடத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். வியாபாரிகள் புதிய தொழில் தொடங்கலாம். பங்குத்தொழில் செய்பவர்கள் சிறப்படைவார்கள். உத்தியோகத்தர்களுக்கு நடக்கும் மாற்றங்களால் நற்பலன் அடைவார்கள். சிலருக்கு எதிர்பகைமை சக ஊழியர்களுடன் ஏற்படும். மாணவர்களுக்கு நல்ல எதிர்காலம் பலருக்கு ஏற்படும். புதியஇடங்களில் கல்விச்சிறப்படைய இடமுண்டு. விவசாயிகளின் விளைபயிர்களுக்கு தக்கபாதுகாப்பின்மையால் விளைவில் பாதிப்பு ஏற்படாமல் இருக்காது. பெண்களுக்கு சிறப்பான காலமாகும். திருமணமாகாத பெண்களுக்கு பேச்சுவார்த்தைகள் நடக்கச் சந்தர்ப்பங்கள் உண்டு.

### எண் 3: 3 12 21 30-ம் திகதிகளில் பிறந்தவர்கள்

இவர்களுக்கு பழையன கழிதலும் புதியன புகுதலும் என்பதற்கிணங்க புதிய இடங்களில் செல்லவோ குடியிருக்கவோ சந்தர்ப்பங்கள் ஏற்படும். சிலர் காணி பூமிகளை விற்று புதிய இடங்களைவாங்கவோ, முன்னர் பட்ட கடன்களை அடைக்கவோ முயலுவார்கள். உங்கள் சுயபுத்தியில் செயல்படுங்கள் வெற்றிகிடைக்கும். அரசியலில், அல்லது பொதுக்காரியங்களில் ஈடுபட பலருக்குச் சந்தர்ப்பங்கள் ஏற்படும். முன்னரிலும் வைத்தியச்செலவுகள் அதிகரிக்கும். வியாபாரிக

ளுக்கு புதிய வியாபாரமுயற்சிகள் தொடங்கச் சந்தர்ப்பங்கள் ஏற்படும். ஆனால் கடன்படவேண்டிய நிர்ப்பந்தங்கள் ஏற்படஇடமுண்டு. உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் கண்டிப்பும் கருணையும் மாறிமாறி இருக்கும். மாணவர்கள் தமது கல்வியில் கவனமாக இருக்கவேண்டும். ஊக்கத்தைக் கைவிடாமல் இருந்தால் பலனுண்டு. விவசாயிகள் நல்லபலனை அடைய இடமுண்டு. ஆனால் நண்பர்களை நம்பவேண்டாம். ஆவணி 1987க்குப் பின்பு சவனமாகப் பிரயாணங்கள் செய்யவேண்டும். பெண்களுக்கு ஆடம்பரப் பொருட்கள் வீட்டிற்கு வந்துசேரும். ஆடை அணிகலன்களுக்காக அதிக பொருட்கள் செலவு செய்வீர்கள். குடும்பத்தில் நற்புத்திரர்களால் பலவிதச் சிறப்புக்கள் ஏற்படும்.

## எண் 4: 4 13 22 31-ம் திகதிகளில் பிறந்தவர்கள்

உங்களுக்கு 1987-ம் ஆண்டு பலவித மாற்றங்களைத் தரும். அதிக பிரயாசையின்றி எடுத்த காரியங்கள் நிறைவேறும். உங்களுக்கு ஒளிமயமான எதிர்காலம் காத்திருக்கின்றது. ஆனால் சிலர் வழிதவறிப்போக முற்படுவதால் அவதிகள் ஏற்பட்டு துன்பப்படவும் இடமுண்டு, பொருளுக்காக போராடி வெற்றிபெறுவீர்கள். நல்லவர்கள் பெரியவர்களின் உதவிகள் கிடைக்கும். சமுதாயத்தில் மதிப்பும், கௌரவமும் கிடைக்கும். நண்பர்கள் எனச்சிலர் உங்களை ஏமாற்றிடுவர். பொருளாதார வரவு ஏற்படும். இந்தவருஷம் சுறுசுறுப்பாக இருப்பீர்கள். பிரயாணங்களை விட்டுவிடவும். இங்கேயே தொழில்விருத்தி குடும்பசுகம் கிடைக்கும். பிணைநிற்கவேண்டாம். சிலருக்கு திடீரென முன்னேற்றமும் சிலருக்கு திடீரென வீழ்ச்சியும் ஏற்படும். புதியதொழில்களை இவ்வருஷம் ஆவணி மாதத்திற்குப் பின்பு தொழில்துறையில் புதிய திட்டங்கள் செய்யவும், உத்தியோகத்தர்களுக்கு விசேடபலனுண்டு. மேலதிகாரிகளின் ஆதரவும் சகஊழியர்களின் உதவிகளும் கிடைக்கும். உங்களில் பலருக்கு காரியசித்தியும் வீடு, மனைச்சிறப்புக்களும் கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் அரசியல்வாதிகளின் புரட்சித்திட்டங்களால் கவரப்படுவீர்கள். விவசாயத்துறையினருக்கு பூமி, வாகனம் கிடைக்கும். புதிய அணுகுமுறைகளைக் கையாளுவீர்கள். பெண்களுக்கு சுபகருமங்கள் நிறைவேறும், குடும்பத்தில் கொண்டாட்டம் ஏற்படும். சிலருக்கு அவமதிப்பு ஏற்படவும் இடமுண்டு.

## எண் 5: 5 14 23-ம் திகதிகளில் பிறந்தவர்கள்

உங்களுக்கு இவ்வாண்டில் முதல் ஆறும்மாதம் ஒருபலனும் அதன் பின்பு முன்னரிலும் பார்க்க கஷ்டமான பலன்களையும் கொடுக்கும். சொத்துக்களால் வருமானம் பெருகும். அன்னிய இடங்களுக்கு பிரயாண வசதிகள் கிடைக்கும். நண்பர்களின் உதவிகள் கிடைக்கும். குழந்தைகளால் நற்பலன்கள் ஏற்படும். தொழில் மாற்றங்கள் ஏற்படும். பழையன கழிதலும் புதியன புகுதலையும் விரும்புவீர்கள். புதிய புதிய ஒப்பந்தங்களை சிலர் செய்துகொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்படும். திடீரென வெளிநாட்டுப் பிரயாணம் எனச் சொல்லி சில ஏஜென்ஸிகள் காசு பறிக்க இடமுண்டு. பிரயாணத்தில் அவதானமாகச் செயற்படவும். ஆகஸ்ட் 1987க்கு முன்னர் பிரச்சனை இருந்த விஷயங்களால் நஷ்டங்கள் ஏற்படும். குடும்ப வாழ்வில் பல பிரச்சனைகள் ஏற்படும். நரம்புத்தளர்ச்சி ஏற்படும். வாய்வு தொல்லை கொடுக்கும். உறவினர்களை நம்பவேண்டாம். உங்களுக்கு மாறாக சில காரியங்களை நீங்கள் அறியச் செய்வார்கள். பிறருக்கு பொறுப்பு நின்று ஏமாந்து பேர்காதீர்கள், வியாபாரிகள் புதிய பங்காளிகளைச் சேர்த்து வியாபாரத்தைத் தொடங்கலாம். திடீர் லாபங்களை அடைவீர்கள். உத்தியோகத்தர்கள் சிலருக்கு மாற்றங்களும், பொறுப்புக்களும் காத்திருக்கின்றன. மேலதிகாரிகளுடன் இடைக்கிடை அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டு மனவிரக்தியைக் கொடுக்கும். சிற்றூழியர்கள் தொல்லை கொடுப்பர். மாணவர்களுக்கு பொதுவாகச் சிறப்பான காலமாகும். இடம்மாறி அல்லது வெளிநாட்டுக் கல்வியில் நாட்டமுள்ளவர்களுக்கு நல்ல எதிர்காலங்கள் ஏற்படும். விவசாயிகள் தாம் கஷ்டப்பட்டு விளைவித்த பொருட்களை தாமே நேரடியாக விற்பனை செய்வதால் அதிக லாபத்தை தேடிக்கொள்ளலாம். உங்கள் உடல் நிலையில் அவதானமாக இருக்கவும். பெண்கள் இந்த வருஷம் அவதானமாக நடந்து கொள்ளல் வேண்டும். வீண்பழி கேட்கவேண்டி வரலாம். பிறரால் வஞ்சிக்கப்படலாம்; திடீரென ஆபத்துக்களில் சிக்கிக் கொள்ளலாம். குடும்பப் பெண்கள் கணவனுடன் அபிப்பிராய பேதமேற்படலாம். சிலருக்கு கருச்சிதைவு கூட ஏற்பட இடமுண்டு. இந்த எண்காரர்கள் முருகப்பெருமானை வழிபட்டு வரவும்.

## எண் 6: 6 15 24-ம் திகதிகளில் பிறந்தவர்கள்

உங்களுக்கு இந்தவருஷம் புதிய வாழ்வு ஏற்படும். தெய்வபக்தியானவர்களின் உதவிகள் கிடைக்கும். தன் சுயவிருப்பப்படி நடந்து வெற்றி அடைவீர்கள். அதிகாரச் சிறப்பும் அலைச்சலும் மாறிமாறி ஏற்படும். குடும்ப வாழ்வில் பலருக்கு அமைதி குன்றும். ஒருவரை ஒருவர் குற்றம் சொல்லுவார்கள். பொருள் விஷயத்தில் மிகவும் அவதானமாக கொடுக்கல் வாங்கல்களைச் செய்து கொள்ளவும். உங்களைப் பற்றி பலரும் தவறான கருத்துக்களை சிலர் பரப்புவார்கள். இருப்பினும் உங்கள் புத்தி சாதுரியத்தாலும், பெரியவர்களின் உதவிகளாலும், நண்பர்களின் ஆதரவாளர்களாலும் எவரும் உங்களை வெல்ல முடியாது. செப்ரெம்பர் 1987-ன் பின்பு நல்ல எதிர்பார்ப்புக்களை எதிர்பார்க்கலாம். அதற்கு முன்பு போராட்டமான காலமாகும்: வியாபாரிகள் பொறுமையாக இருக்கவும், புதிய திட்டங்கள், முதலீடுகளை செப்ரெம்பர் 1987க்குப் பின்பு செயற்படுத்தவும் உத்தியோகத்தர்களுக்கு செலவு அதிகரிக்கும். நேர்மையுடன் நடந்து கொள்ளாவிடில் அவமானம் தேடி ஓடிவரும். மாணவர்கள் கல்வியில் முழுக் கவனத்தைச் செலுத்துவார்கள்: விவசாயிகளுக்கு அன்னியர் உதவி செய்வார்கள். கடன் காரரால் தொல்லைகள் அதிகரிக்கும். கள்வரால் பயம் ஏற்படும். பெண்களுக்கு திருமணப் பேச்சு அல்லது குடும்பச் சிறப்பு ஏற்படும். பொதுவாக மத்திய பலனைக் கொடுக்கும். இந்த எண்காரர்கள் பிறருக்கு பொறுப்பு நிற்பதை நிறுத்திக் கொள்ளவும்.

## எண் 7: 7,16,25-ம் திகதிகளில் பிறந்தவர்கள்

உங்களுக்கு இடைக்கிடை போராட்டமிருந்தாலும் எதற்கும் அஞ்சாது செற்படுங்கள் வெற்றிக்குமேல் வெற்றி கிடைக்கும். இந்த வருஷத்துக் கதாநாயகர்கள் நீங்கள். எதையும் துணிந்து சாதனைப் படுத்துவீர்கள். புதியவாழ்வு, புதிய இடம், புதியகாணி அல்லது வீடு, வாகனச் சிறப்புக்கள் ஏற்படும். அரசியலில் உன்னத நிலையைக் கொடுக்கும். புதிய ஒப்பந்தங்களைச் சிலர் செய்து கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்படும். பழைய கடன்களை அடைக்க புதிய கடன்களைப் பெற்றுச் சமாளித்துக் கொள்ளுவீர்கள். வெளிநாட்டு வாய்ப்புக்களை தேடிக்கொள்ளவும் சிறப்புக்கள் ஏற்படும். சகோதரங்களுக்கு திடீர் முன்னேற்றம் பிரயாணங்கள் ஏற்படும். உங்களுக்கு பொது ஜனங்களின் ஆதரவு பெருகிவரும். குடும்பத்தினர்கள் குதூகலமடைவார்கள், வழக்குகள் சாதகமாகும். வியாபாரிகள் காற்றுள்ள பொழுது தூற்றிக் கொள்ளுங்கள். பங்கு வியாபாரிகள் சிறப்படைவார்கள். எண்ணெய்யுடன் தொடர்புடைய தொழில்கள் செய்பவர்கள் நஷ்டமடைவார்கள். அவதானமாக இருக்கவும். உத்தியோகத்தர்களுக்கு தொழிலிடத்தில் போராட்டம் ஏற்பட்டாலும் மேலதிகாரிகளின் ஆதரவு, நல்லபிப்பிராயம் இருக்கும். குடும்பச்செலவு அதிகரிக்கும். மாணவர்கள் பலருக்கு கல்வியில் தடை ஏற்படும். நாட்டில் நடக்கும் அசம்பாவிதங்களால் சிலர் பாதிக்கப்படுவார்கள். விவசாயிகள் பூமியால் நல்ல பலனை எதிர்பார்க்கலாம். இனஜனங்கள் ஆதரவு தருவார்கள். பெண்களுக்கு நல்ல பலனைக் கொடுக்கும். ஆடை, ஆபரணம் வாங்குவதில் அதிக பொருளைச் செலவு செய்வார்கள்.

## எண் 8: 8 17 26-ம்திகதிகளில் பிறந்தவர்கள்

உங்களுக்கு சகடயோகவாழ்வு இந்த ஆண்டாகும். சிலருக்கு கஷ்டமும் நன்மையும் மாறி மாறி ஏற்பட்டாலும் பெரும்பான்மையானவர்களுக்கு வெற்றியோ இலாபமோ கிடைக்கும். எதிர்பாராத பிரயாணங்களால் நற்பலன்கள் கிடைக்கும். ''ஊக்கமது கைவிடேல்'' அதிகாரபீடங்களிலும் அரசியலிலும் உள்ளவர்களுக்கு நற்பலன்கள் சென்ற ஆண்டைவிடக் கிடைக்கும். நண்பர்களின் உதவிகள் கிடைக்கும். புதிய திட்டங்களை உருவாக்கி வெற்றிபெறுங்கள். சிலருக்கு திடீரென குடும்பப்பிரச்சனைகள் ஏற்பட்டு மனச்சஞ்சலம் அடைவார்கள். வியாபாரிகள் ''காற்றுள்ள பொழுதே தூற்றிக் கொள்ளவும்''. புதிய நண்பர்கள், அன்னியர்களால் இலாபமடைவீர்கள். உத்தியோகத்தர்களுக்கு தொழில் இடத்தில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். நல்ல பெயர் கிடைக்கும். மாணவர்களுக்கு உயர்படிப்பு கல்விப்பீடங்களின் உதவிகள், நல்ல ஆசிரியர்களின் ஆலோசனை கிடைக்கும். சிலருக்கு வெளிநாடு செல்லவாய்ப்பு ஏற்படும். பொதுவாக கல்வியில் சிறப்பு மேலோங்கும். விவசாயிகளுக்கு பூமியால் அதிகவிளைவு அல்லது இலாபம் கிடைக்கும். பெண்களுக்கு வெளிநாட்டுப் பிரயாணங்கள் காத்திருக்கின்றன. சிலருக்கு இடாம்பீகப் பொருட்கள் வந்துசேரும். காலதாமதமான திருமணப்பேச்சு வார்த்தைகள் தொடரும். சிலருக்கு திருமணம்

(23ம் பக்கம் பார்க்க)

# எண் சோதிடமும் அதன் உண்மைகளும்

## 2. எண்களும் கிரகங்களும்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

மேலைநாட்டினர் கிரகங்களுக்கு எண்கள் வகுக்கும்போது சூரியனுக்கு இருஎண்களைக் கொடுத்து அதன் தனித்துவத்தையே மறைத்தனர். அவர்கள் கொடுத்த எண்கள் 1, 4 ஆகும். எண்-1 சூரியனின் சாதகமான பலன்களையும் எண்-4 சூரியனின் பாதகமான பலன்களையும் குறிப்பதாகக் கருதினார்கள்.

இதேபோல் சந்திரனுக்கு எண் 2,7 வகுத்தார்கள். எண் 2 சந்திரனின் சாதகமான பலன்களையும், எண் 7 சந்திரனின் பாதகமான பலன்களையும் குறிப்பதாகக் கருதினார்கள். இது அறியாமையாகும். அண்மையில்தான் யூரேனசும் நெப்ரியூனும் விஞ்ஞானிகளால் கண்டுபிடிக்கப்பட்டன. இதன் பின்பு யூரேனசுக்கு எண் 4-ம் நெப்டியூனுக்கு எண் 7-ம் வகுக்கப்பட்டன:

'பவானி' — பருத்தித்துறை

ஆனால் நம்மவர்கள் எப்போது சூரியன் சந்திரனைக் கண்டு கொண்டார்களோ அன்றே ராகு, கேதுக்களையும் கண்டு கொண்டனர். அதனால் சோதிடத்திலும் இவர்களைக் கையாண்ட போதிலும், கிரகங்களுக்கு எண்களை வகுக்கும்போது சாயாக் கிரகமாகிய ராகு, கேதுக்களுக்கும் எண்கள் வகுத்தார்கள்.

இந்துக்களில் கிரகங்களுக்கு எண்களை வகுக்கும் போது மகாரிஷி பராசரர் முறையில் ஒரே ஒரு முரண்பாடு காணப்படுகிறது. ராகுகேதுக்களின் வலிமையையும் தாக்கத்தையும் பராசரர் நன்கு உணர்ந்திருந்தால் இவ் முரண்பாடு எழுந்திருக்காது. பராசரர் கூறிய முறையினால் வார அதிபதிகளுக்கு முறையே முதல் ஏழு எண்களையும் வகுத்துவிட்டு எஞ்சிய இரு எண்கள் 8,9 முதலியவைகளை இராகு கேதுக்களுக்கு வகுத்தார்கள். இவ்விடயத்தில் இவர்கள் இராகு கேது யாவும் வெறும் நிழல் கிரகங்கள் தானே என்ற ஏளனத்துடன் நடந்து கொண்டார்களெனத் தோன்றுகின்றது. அவர்களின் செயலுக்கு எவ்வித காரண காரியங்களும் காட்டப்படவில்லை. இராகு கேதுக்குரிய பலன்கள் யாவும் எண்கள் 8,9 முதலியவைகளில் காணப்படுவதாக சும்மா சப்பை கட்டுகின்றார்கள். எவ்வித ஆராய்ச்சியும் ஆழ்ந்த அறிவும் இல்லாததினால் ஏற்பட்ட விளைவு இதுவாகும். எல்லாக் கிரகங்களையும்விட மிக வலிமையான பலன்களை இராகுகேது முதலியோரே கொடுக்கக் கூடியவர்கள் என்பதை முதன்முதலில் செயல் முறையில் நிரூபித்த பெருமை சோதிட மேதை திரு, கே. எஸ். கிருஷ்ணமூர்த்திக்குத்தான் உண்டு. அப்படியானால் அவைகளின் எண் பெறுமானம் 8,9 ஆக அமையமுடியுமா?

பொதுவாக இராகுகேது முதலியோருக்கு சுயமாக எந்தப்பலனும் கிடையாது என்பது யாவரும் அறிந்ததே. இவர்கள் எந்த ராசியில் நிற்கிறார்களோ அந்த ராசியதிபதிகளின் பலன்களையும் எந்தக் கிரகங்களைச் சார்ந்து நிற்கிறார்களோ அவர்களின் பலன்களையும், எந்தக் கிரகங்கள் இவர்களைப் பார்க்கின்றார்களோ அவர்களின் பலன்களையும், எந்த நட்சத்திரத்தில் நின்றார்களோ அவ்வதிபதியின் பலன்களையும் கொடுப்பார்கள்.

என்னதான் ராகு கேதுக்கள் சூரியசந்திரனுடன் சம்மந்தப்பட்ட போதிலும் அவர்களுக்கு சுயமாக தனித்துவம் கிடையாது. இதனால்தான் இராகுவிற்கு எண் 4-ம் கேதுவுக்கு எண் 7-ம் வகுக்கப்பட்டன. மற்றும் எண்களுக்கு தனித்துவம் காணப்பட்ட போதிலும் இவ்வெண்களிடத்தில் (4,7) தனித்துவம் மிகக் குறைவே. இவர்கள் எண்கள் 1,2 முதலியவைகளில் தங்கியிருக்கின்

ருர்கள் இதன் விளக்கத்தை அடுத்த அத்தியாயத்தில் கவனிப்போம்.

இந்துக்கள் உருவவழிபாட்டில் நம்பிக்கை உள்ளவர்கள். அலைபாயும் மனதினை ஒருநிலைப் படுத்த இந்துக்கள் தெய்வத்திற்கு உருவங்கள் சமைத்தார்கள். இந்த அண்டத்தை பரிபாலனம் செய்யும் சக்தியை வடிவப்படுத்தி வணங்குவதில் மனநிறைவைப் பெற்றுர்கள். அண்டத்தைக் கிரகங்களும் பரிபாலனம் செய்வதால் அவர்கள் வழிபாட்டில் (ஏழு கிரகங்களும் இரு சாயாக் கிரகங்களும்) நவக்கிரகங்களும் இடம்பெற்றன.

கர்மம் முதல் வருகிறது, பின்புதான் கடவுள் வருகின்ருன் என்ற நம்பிக்கையை உடையவர்கள் இந்துக்கள், கர்மங்களைச் செயல்படுத்தவோ அல்லது காரணகர்த்தாவாகவோ இருப்பதுகிரகங்கள்,இவை களிலும சுபக்கிரகங்கள், பாபக்கிரகங்கள், அரைச் சுபக்கிரகங்கள் என்று மூன்று வகைகள் உள.

இதனுல் தான் ஆலயங்களிலுள்ள நவக்கிரக வழிபாட்டில் முன்வரிசையில் சுபக்கிரகங்களாகிய சந்திரன், சுக்கிரன், புதன் முதலியோரையும் இரண்டாவது வரிசையில் செவ்வாய், சூரியன் குரு முதலியோரையும் மூன்ருவது வரிசையில் பாவக்கிரகமாகிய இராகு, சனி, கேது, முதலியோரையும் காணலாம். கிரகங்கள் யாவும் சூரியனை வலம் வருவதினுல் இங்கும் சூரியனின் உருவத்தை மற்றும் கிரகஸ்வரூபங்களுக்கு நடுவில் எழுந்தருளச் செய்தனர்.

காலத்திற்கு உட்பட்ட நமக்கு காலத்தை பரிபாலனம் செய்யும் கிரகங்களினுல் வருகின்ற உபாதைகளை நிவிருத்தி செய்வதற்காகத்தான் நவக்கிரக ஸ்வரூபங்களை பிரதிஷ்டை செய்திருக்கின்ருர்கள்.

என்னதான் சில கிரகங்கள் சுபர்களாக இருந்த போதிலும் சிலவற்றுக்குள் சில பிரச்சனை இருப்பதால் அவைகளை அருகருகே எழுந்தருளச் செய்யவில்லை, இந்துக்களின் புராணத்தில் சந்திரனுக்கும், குருவுக்கும், புதனையிட்டு பெரும் பிரச்சனை எழுந்தபடியால் சந்திரனுக்கு அருகில் புதனை எழுந்தருள விடாமல் குருவுக்கு அருகில் புதனை எழுந்தருளச் செய்தனர், இதேபோல் சந்திரனுக்குரிய எண் 2 ஒரு நாளும் புதனுக்குரிய எண் 5 உடன் ஒத்துப் போவதில்லை. எனவே எண் 2ன் ஆதிக்கத்தில் உள்ளவர்கள் எண் 5ன் ஆதிக்கத்தில் உள்ளவர்களைத் திருமணம் செய்யக் கூடாது.

இப்படியான பல கருத்துக்களையும் விளக்கங்களையும் கொண்டுதான் நவக்கிரக ஸ்வரூபங்களை அந்தந்த இடங்களில் அமைத்தனர்.

உண்மையில் கிரகங்களும் ஒரு ஒழுங்கிற்கு கட்டுப்பட்டு செயல்படுகின்றன. அவை ஆதிக்கம் செலுத்தும் மனித இயக்கம் கூட ஒரு ஒழுங்கிற்குக் கட்டுப்பட்டு நடைபெறுகிறது. உலகின் எல்லாமே கிரகங்களின் செயல்பாட்டினுல் ஒரு ஒழுங்கிற்குக் கட்டுப்பட்டு செயல்படுகின்றன.

இயற்கையை மனிதன் வென்ருன் என்பது பொய்யாகும்.இயற்கையின் இரகசியங்களை அவன் கண்டு கொண்டான்என்பதுதான் உண்மையாகும்.

இதேபோல் விதியை வென்ருன் என்பது பொய்யாகும். விதியின் இரகசியங்களைச் சோதிடன் கண்டு கொண்டான் என்பதுதான் உண்மையானதாகும்.

"எழுதிச் செல்லும் விதியின் கை
எழுதி எழுதிமேற் செல்லும்
தொழுது கெஞ்சி நின்ருலும்
சூழ்ச்சி பல செய்தாலும்
வழுவிப் பின்னுல் நீங்கியொரு
வார்த்தை யேனும் மாறிடுமோ?
அழுத கண்ணீர் ஆறெல்லாம்
அதிலோர் எழுத்தை அழித்திடுமோ?"

— உமர்கயாம்

உண்மையைப் புரிகின்ற போது முரண்பாடுகள் ஏற்படுவது இயல்பே.

கிரகங்களையும், நட்சத்திரங்களையும் வான் மண்டலத்தில் பாருங்கள், அவை அனைத்தும் திட்டமிட்ட ஒரு நியதியில் அணுவேனும் தடுமாற்றமின்றி பலகோடி ஆண்டுகளாகச் செயல்பட்டு வருகின்றன. இப்படிச் செயல்பட எந்த விஞ்ஞானி முன் வந்தான்? அவைகளின் செயல்பாட்டை எவனுவது மாற்றியமைக்க முடிந்ததா?

திட்டமிட்டுச் செயல்படும் விண்வெளிப் பொருள்களுள் நமக்கு மிகுந்த தொடர்புடையது சூரியனுகும். அவனின் ஒளியும் வெப்பமும் மண்ணுலக வாழ்விற்கு இன்றியமையாதனவாம். இதனுல் பண்டைக்காலத்தில் உலகின் பல நாட்டவரும் (எகிப்து, கிறிஸ், சைனு, இந்தியா) சூரியனை ஒரு கடவுளாக வழிபட்டனர். சூரிய நமஸ்காரம் இன்னும் இந்தியாவில் ஒரு வழிபாட்டு முறையாகும். (வளரும்)

# மூலிகைகளும் மருத்துவமும்

கனகராசா உதயகுமாரன், முருகன் மெடிக்கல் ஸ்ரோர்ஸ் நவீன சந்தை, சாவகச்சேரி.

## குப்பைமேனி

குளிர்ச்சியான இடத்தில் பல செடிகளுக்கு ஊடே குப்பைமேனிச்செடி வளர்ந்திருக்கும். இது ½அடி தொடக்கம் 1½அடி வரை உயர்ந்து வளரும். ஒரே நீண்ட கிளையில் பல சிறிய கிளைகளுடன் அடர்த்தியாக முக்கால் அடிவரை அகலமாகப் படர்ந்து வளரும். இதன் இலை ரூபா அகல முதல் 25சத அகலம் வரை வட்டவட்டமாக இருக்கும். ஓரத்தில் சில வாள்பல் தோன்றும். இலை பச்சைப் பசேலென்றிருக்கும். இலைகளின் இணைப்பில் இருந்து சிறுநரம்புகள் தோன்றி அதில் மொக்குவிட்டு புஷ்பிக்கும். மாரி காலத்தில் எங்கும் செழித்து வளரும். கோடை காலத்தில் செழுமை குன்றிக் காணும்.

இது ஒரு வியாதியையல்ல பல வியாதிகளை குணப்படுத்தும் சக்திவாய்ந்ததாக இருக்கிறது.

### அஜீரணம், வாய்வு, வயிற்றுவலி குணமாக

குப்பைமேனியைக் கொண்டு வந்து இலையை ஆய்ந்து எடுத்து உரலில் போட்டு இடித்து கசக்கிப் பிழிந்து சாறு எடுக்கவேண்டும். இந்தச் சாற்றில் அரை டம்ளர் அளவு சாற்றை ஒரு சட்டியில் விட்டு அரை டம்ளர் அளவு உப்பையும் அதில் கரைத்து அடுப்பில் வைத்து காய்ச்சினுல் சாறு சுண்டி உப்பு மட்டும பூர்க்கும். இந்தச் சமயம் சட்டியை இறக்கிவைத்து ஆறிய பின் அந்த உப்பை அம்மியில் வைத்து பட்டுப் போலத் தூள்பண்ணி ஒரு சீசாவில் போட்டு வைத்துக்கொண்டு தினசரி காலை மாலை 5 காசு எடை தூளை எடுத்து ½ டம்ளர் அளவு மோரில் கலந்து கொடுக்க அஜீரணம், குன்ம வயிற்றுவலி வாய்வுக் கோளாறுகள் குணமாகும்.

### சிறுவர்களின் வயிற்றிலுள்ள நாக்குப் பூச்சியை வெளியேற்ற:

சுமார் 1½அடி உயரம்வரை செழிப்பாக வளர்ந்துள்ள குப்பைமேனிச் செடிகளை வேருடன் எடுத்து வந்து வேர்ப்பகுதியை நன்ருகக் கழுவி சுத்தம் செய்து, மற்றப் பகுதிகளையும் சுத்தம் பார்த்து பொடியாக நறுக்கி வெய்யிலில் போட்டு சருகு போலக் காயவைத்து அதில் ஒரு கைப்பிடியளவு எடுத்து ஒரு சட்டியில் போட்டு 2 டம்ளர் அளவு தண்ணீர் விட்டு ஒரு ஆழாக்களவிற்குச் சுண்டக் காய்ச்சி ஆறியபின் மருந்தை நன்ருகக் கசக்கிப் பிழிந்து வடிகட்டி அதை விடியற்காலையில் வெறும் வயிற்றில் குடிக்கக் கொடுத்துவிடல் வேண்டும். 3மணி நேரம் சென்றபின்னர் வயிற்ருல் போகும். பயப்படத் தேவையில்லை. போகும் மலத்தில் நாக்குப் பூச்சிகள் உயிரிழந்து வெளியேறுவதைக் காணலாம். மேலும் பூச்சிகள் வயிற்றில் இருப்பதாகத் தெரிந்தால் மறுபடியும் இதே மருந்தை 7 நாட்களுக்குப் பின் கொடுத்தால் அவ்வளவும் வெளியேறிவிடும்.

### மார்புவலி குணமாக:

குப்பைமேனியைக் கொண்டுவந்து இலைகளை ஆய்ந்து அதை வெய்யிலில் காயப்போட்டு சருகாகிய பின் உரலில் போட்டு இடித்து ஒரு வாய கன்ற சீசாவில் போட்டு வைத்துக்கொள்ளவேண்டும். தினசரி படுக்க ½ மணியிலிருக்கும் பொழுது இந்தத் தூளில் எடுத்து ஒரு டம்ளர் காய்ச்சிய பசுவின் பாலில் போட்டுக் கலக்கிக் குடித்து ½ மணி நேரம் கழித்துப் படுக்கவேண்டும். இதே விதமாகத் தொடர்ந்து 7நாள் சாப்பிட்டு வந்தால் நெஞ்சுவலி, நெஞ்சுக்குத்து, மூச்சுத் திணறல் குணமாகும்.

### காயப்புண் ஆற:

காயப்பட்ட புண், அல்லது வேறு வகையான புண் எதுவாக இருந்தாலும் சரி அதை ஆற்றும் சக்தி குப்பைமேனிக்குண்டு. இவ்விலையை அம்மியில் வைத்து மைபோல அரைத்து காயம் அல்லது புண்ணின்மேல் வைத்துக் கட்டிவந்தால் புண் ஆறும். ஆனுல் மருந்து கட்டியவுடன் எரிவாகவிருக்கும்.

### தேள் விஷம் இறங்க:

இந்த இலையை உள்ளங்கையில் வைத்துக் கசக்கினுல் சாறுவரும். உடலின் எந்தப்பகுதியில் தேள் கடித்திருக்கிறதோ அதைக் கவனித்து இடதுபக்கம் கடித்தால் வலது காதிலும், வலது பக்கம் கடித்தால் இடது காதிலும் இரண்டுதுளி

விட்டு கசக்கிய இலையை கொட்டு வாயில்வைத்து நன்ருகத் தேய்த்துக்கொண்டிருந்தால் உடனே விஷம் முறியும். கடுப்பு நின்றுவிடும்.

காதுவலி குணமாக:

இந்த இலையை தணலில் காண்பித்து வதக்கி கையில் வைத்து கசக்கிப் பிழிந்துவரும் சாற்றை வலியுள்ள காதில் இரண்டு துளிவிட்டு பஞ்சு அடைத்துவிட வேண்டும். தினசரி காலையில் காதை சுத்தம்செய்து புதிய சாறுவிடவேண்டும். மூன்றுதரத்தில் காதுவலி குணமாகிவிடும்.

பூரான் கடிக்கு:

பூரான் கடித்துவிட்டால் உடல் முழுவதும் தடிப்புகள் தோன்றி அரிக்கும். அமாவாசை சமயம் அதிக தொந்தரவைக் கொடுக்கும். இதை உடனடியாக கவனித்துக் குணப்படுத்தாவிட்டால் பின்னல் அதிக கஷ்டத்தைக் கொடுக்கும். இந்த இலையுடன் சிறிதளவு உப்புச் சேர்த்து மைபோல அரைத்து காலை வேளையில் உடல்முழுவதும் பூசி ஒரு மணி நேரம் ஊறவைத்துக் குளிப்பாட்ட வேண்டும். தொடர்ந்து மூன்று நாட்கள் செய்தால் பூரான் விஷம் முறிந்துவிடும்.

சொறி, சிரங்கு குணமாக:

இவ்விலையை தேவையான அளவு கொண்டு அதை அம்மியில் வைத்துசிறிய துண்டு மஞ்சளையும் சிறிதளவு உப்பையும் சேர்த்து மைபோல அரைத்து சிரங்கின்மேல் பூசி ஒருமணி நேரம் ஊறியபின் சுட்ட சியாக்காயுடன் சிறிதளவு மஞ்சள் சேர்த்து அரைத்து அதைப் போட்டுக் கழுவி சாம்பல் ஒத்தணம் கொடுத்து சிரங்கில் சிறிதளவும் நீர் இல்லாமல் ஒத்தி எடுத்து தேங்காய் எண்ணெயைத் தடவிவிடல் வேண்டும். இதைப் போட்டதும் எரிவாக இருக்கும். மூன்றே நாளில் சிரங்கு உதிர்ந்துவிடும். தினசரி சுத்தம்செய்த பின்னரே புதிய மருந்து தயாரிசெய்து போடவேண்டும். முதல்நாள் அரைத்த மருந்தை மறுநாள் போடக் கூடாது.

---

முக்கிய குறிப்பு:

'சோதிடமலரில்' வெளியாகும் கட்டுரைகளில் வரும் கருத்துக்கள் கட்டுரையாளரின் சொந்தக் கருத்துக்களேயாகும்; கட்டுரையாளர்களின் கருத்து வேறுபாடுகளுக்கு ஆசிரியர் பொறுப்பாளியல்லர்.

ஆ-ர்

---

1987 ல (19ம் பக்கத் தொடர்)

நடக்கும்; இந்தஎண்காரர்கள் கை, கால் வீக்கம் அல்லது உளைவு, காயங்கள் ஏற்பட இருப்பதால் அவதானமாக இருக்கவும். போக்குவரவில் கவனமாக இருக்கவும்.

எண் 9: 9,18,27-ம் திகதிகளில் பிறந்தவர்கள்

உங்களுக்கு எதிர்பாராதவிதமான போராட்டங்கள் ஏற்படும். சிலருக்கு அவமிருத்து ஏற்படும். பிரயாணங்களின் நிமிர்த்தம் கடன் பட்டு கலங்க இடமுண்டு. திருமணப் பேச்சுவார்த்தைகள் தடைப்படும். பொருள் விஷயத்தில் சமாளித்துக் கொள்ளுவீர்கள். அடிக்கடி அலைச்சல், இனஜனவிரோதம், தொழிலிடத்தில் அபிப்பிராய பேதம், கடன்காரர்களின் தொல்லைகள் என்பன ஏற்பட்டபடி இருக்கும், சிலர் மதுவுக்கும், மங்கைக்கும், சூதுக்கும் பொருளைக் கொட்டி கடன் படுவார்கள். இவர்களில் அன்னிய இடங்களில் சென்று தொழில் செய்ய முடியும் சிலருக்கு வைத்தியச் செலவு அதிகரிக்கும். வியாபாரிகளுக்கு பங்குத் தொழிலால் சிறப்பு. சாதாரண தொழில் செய்பவர்கள் கொடுக்கல் வாங்கல்களில் பிரச்சனைகள் தோன்றி பகைமை வளரும். உத்தியோகத்தர்கள் கலகம் விளைவித்தபடியே காலத்தைக் கழிப்பார்கள். வீண்பழி கேட்பீர்கள். சக ஊழியர்களுடன் அபிப்பிராயப் பேதப்பட்டு கெட்ட பெயர் வாங்குவர். ''அமைதி கலக நாஸ்தி'' எனவே அமைதியாக இருந்து நல்ல பெயரை எடுக்க முயற்சிக்கவும். மாணவர்களுக்கு ஆதரவு பெருகும். ஊக்கத்துடன் செயற்படவும். மெய் வருந்த நிட்சயம் கூலி கிடைக்கும். பெண்களுக்கு பலவித துன்பங்கள், வசைகள் ஏற்படும். அவதானமாக இருக்கவும்.

## 'ஞானம்'

பழி வாங்கக்
குழி பறித்தவர்
பறித்த குழிக்குள்
தானே வீழ்ந்து
அழிந்து போகையில்
பிறந்தது ஞானம்
— வினையது விரும்பேல் —

சின்னத்தம்பி சதாசிவம்

# ஆய்வு மன்றம்

கு. சிறீதரன் சின்னக்கடை, மன்னூர்.

குரு வக்கிரக கதியில் செல்கிறார். அவர் மிதுனத்தை அடைய இன்னும் இரண்டே இரண்டு கலைகள் மாத்திரம் இருக்கின்றன. வக்கிரம் அஸ்தமனம், கிரகங்கள் பலன் செய்யா என்பது சோதிட அறிஞர் கருத்து. சுக்கிரன் பாபசீகத்திரியில் இருப்பதால் எதிர்பார்ப்புக்களுக்குத் தடை தாமதங்களும் தவிர்க்க முடியாதவை தானே!

எம். அல்போன்ஸ் ஸ்ரீ ஜெயன்
77/23 ஜெம்பட்டா வீதி.

உமது பிறந்த நேரம் சரியாக இருப்பின் ஜெனனகாலம் புதன் மகாதசையில் இருப்பு ஸ்ரீ 15 - மீ 04 - நாள் 05 எனவரும். அப்படியாயின் தசாவருடம் 360 நாள் எனக் கொண்டு கணிக்க 1986 மே 04-ந் திகதிவரையும் புதன் தசை நடந்திருக்கும். மேல் கேது மகாதசை 1993 மார்ச் 27ல் முடிவடையும்.

ப. ஜெயவேல்.
158/2 ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு 13.

உமது ஜெனனகாலம் நீர் குறிப்பிட்டபடி காலை 9மணி 25நிமிஷமாக இருக்குமாயின் உமது ஜெனனலக்கினம் விருச்சிகமாக இருக்க வேண்டுமே! சாதகத்தை முதலில் சரியாகக் கணித்த பின் பலனை அறிவதுதான் சரியானது.

தி. ரா. மாதவன். கொழும்பு 6

சாதகத்தில் ஜெனன நட்சத்திரம் மிருகசிரிடம் 3-ம் பாதத்தில் 04 கலை 33 விகலை சென்றுள்ளதால் ஜெனனராசி மிதுனமாகத் திருத்தப்பட வேண்டும். அவ்வாறே செவ்வாயும் கடகத்தில் இருக்க வேண்டும். சாதகம் சுத்தமாகக் கணிக்கப்பட்டால் மாத்திரமே பலன்களும் சரியாக இருக்கும்.

எஸ். மோகன், 5வது ஒழுங்கை, கொள்ளுப்பிட்டி.

7ல் செவ்வாயும் கேதுவும், 7ம் அதிபன் சூரியனுடன 6லும் காரகன் 5லுமாய் அமைந்த சாதகம் வைதிகப் பழக்க வழக்கங்களை விட்டுக் கொடுத்து காலத்தை அனுசரித்துப் போக உம்மால் முடியுமானால் நடப்புச் சுக்கிர தசையில் விவாகசித்தி ஏற்பட இடமுண்டு.

அ. ரவீந்திரன், பூநகரி.

ஏழரைச் சனீஸ்வரனின் கோரப் பிடியில் நளச்சக்கரவர்த்தியும் மனைவியைப் பிரிந்து வாழ்ந்தார் என்பது வரலாறு. பயப்பட வேண்டாம். விரைவில் சேர்ந்துவாழ காலம் பிறக்கும்.

செயபது, கட்டுடை, மானிப்பாய்.

வாக்குத் தானாதிபன் வித்தைக்காரன் உச்சம் பெற்றுத் திரிகோணமேறி வலிமை பெறுவதால் உயர்கல்வி வாய்ப்புக்கள் கிடைக்கும். 'ஊக்கமது கைவிடேல்'

சு. றஜனி, யாழ்ப்பாணம்.

போக்குவரத்துப் பகுதி, தபால் பகுதி, கல்விப் பகுதி, தொழில் நுட்பத்துறை போன்றவற்றுடன் தொடர்புள்ள ஏதாவது ஒரு பகுதியில் வெகுவிரைவில் தொழில் கிடைக்கும்.

சு. சரஸ்வதி, யாழ்ப்பாணம்.

சூரியனுடன் சுக்கிரனும் சேர்வது விவாக தாமதத்துக்குக் காரணமாகும். மேலும் சுக்கிரன் அஸ்தமனமடைவதும் களத்திராதிபனுடன் பரிவர்த்தன நைந்நிய யோசம் பெறுவதும் இங்கு கவனிக்கப்பட்டால் சாதகரின் விருப்பத்திற்கு இசைந்து விவாக சித்திக்கு உதவுவது நன்மை தரும்.

சு. ஈஸ்வரி, யாழ்ப்பாணம்.

களத்திராதிபன் சூரியனுடன் சேர்ந்து அஸ்தமனமடைவதும் காரகன் சூரியனுடன் சேர்வதும் முதலான காரணங்களால் விவாகம் தொழில் சம்பந்தமான தடைதாமதங்கள் ஏற்படுகின்றன. தெய்வ நம்பிக்கையும் பக்தியும் இஷ்டசித்திகளை அடையும் மார்க்கம்.

ஆர். ஸ்ரீராம், கொட்டடி, யாழ்ப்பாணம்.

உமது ஜெனன நேரம் குறிப்பிட்டபடி சாதகம் கணிக்கப்பட்டால் சந்திர ராசி மேடமாக அமையும். (ஜென்ம நட்சத்திரம் கார்த்திகை 1-ம் பாதம்) இப்படியாகக் கிரக நிலையிலும் மாற்றங்கள் ஏற்படும். சாதகக் கணிப்புச் சரியாக அமைந்தால் தானே பலனும் சரியாக இருக்கும்.

ஆர். ரஞ்சன், கொட்டடி, யாழ்ப்பாணம்.

தற்சமயம் குரு-சனி இவர்களின் கோசார சஞ்சார சுகம் இல்லை. தனியாக இந்தக் காலத்தில் தொழில் ஆரம்பிப்பது சாதகமாக அமைவது கேள்விக் குறியாகவே இருக்கும்.

Registered as a News Paper at the G. P. O. Sri Lanka.





## ஓர் நற்செய்தி!

மாணவ மணிகளே!

உங்கள் சீருடைகளை அதிவெண்மையாக்க நுரை வளம் கூடிய மில்க்வைற் நீலசோப்பை வாங்கிப் பாவியுங்கள்.

மில்க்வைற் நீலசோப் புதிய வாசனையுடன் எங்கும் விற்பனையாகின்றது

* 200 மேலுறைகளைச் சேகரித்து அனுப்பி அழகிய பாடசாலை பாக் ஒன்றை பரிசாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.
* 1987-ம் ஆண்டிற்கான மகாத்மா காந்திக் கலண்டரைப் பெறுவதற்கு இன்றே மில்க்வைற் தயாரிப்புகளின் மேலுறைகளைச் சேகரியுங்கள்.

## மில்க்வைற் தொழிலகம்

த. பெ. இல. 77, யாழ்ப்பாணம் தொலைபேசி: 23233

விற்பனையாகிக் கொண்டிருக்கின்றது!

## 1987-ம் ஆண்டுக்கான

# திருக்கணித பஞ்சாங்க

## மாதக்கலண்டர், டயறிகள்

வழமைபோல் சகல அம்சங்களுடன் வெளிவந்துள்ளது.

கலண்டர் விலை ரூபா: 12-00

டயறி விலை ரூபா: 19-00

பிளாஸ்டிக் கவருடன் விலை ரூபா: 24-00

எல்லா "சோதிடமலர்" வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

விபரங்கட்கு!

திருக்கணித நிலையம்

மட்டுவில், — சாவகச்சேரி.


Edited by K. Sathasiva Sarma; Printed and Published by S. Sethambaranaatha Kurukkal Thirukkanitha Nilayam, Madduvil, Chavakachcheri, Sri Lanka. Phone: 280